Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 27 திங்கட்கிழமை (09.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 192



உறவைச் சிதைக்கிறது அமெரிக்கா

06



268 சிறுவர்களுக்கு இசுறு உதான

12



கற்பிக்க ஆசிரியர்கள் தயக்கம்

04



முடிவு ஏமாற்றமே

08



36 கோடி ஏழைகள்

16

# பேச்சிற்கு மூன்றாம் தரப்பு நிராகரித்தார் சம்பந்தன்



## முற்றுகிறது கூட்டமைப்பில் முரண்பாடு

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் இடம் பெறும் பேச்சுவார்த்தைகளுக்கு மூன் றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளமையானது கூட்டமைப்பிற்குள் இடம்பெறும முரண்பாடுகளின் உச்சக் கட்டத்தை வெளிக்காட்டுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின் போது

19 ஆம் பக்கம் பார்க்க

## நாளாந்த செயற்பாடான ஆட்கடத்தல் சம்பவங்கள்

(கொழும்பு)

பிரேமகுமார் குணரத்னம் மற்றும் திமுது ஆட்டிகல காணாமற்போனமை தொடர்பில் தாம் அதிக கவனம் செலுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடத்தல் மற்றும் காணாமற் போதல் என்பன நாளாந்த செயற்பாடுகளில் ஒன்றாக மாறியுள்ளமை நாட்டின் நீதியும் பாதுகாப்பும் நடைமுறைப்படுத்தப்படும் முறைமையை தெளிவுபடுத்துவதாக அவர் குறிப்பிடுகிறார்.

கடந்த ஆறு மாதங்களில் 56 காணாமற்போன சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிட்ட ரணில் விக்ரமசிங்க,

19 ஆம் பக்கம் பார்க்க


# பிரேரணைக்கு ஆதரவளிப்பு இந்தியாவின் முடிவு சரியானது

(திருச்சி)

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்த 15 நாடுகளையும் அடுத்த கட்டத்தில் இந்தியா தனது இராஜதந்திரம் மூலமாக தனது பக்கம் மாற்றுமெனவும், இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளித்தது சரியான முடிவுதான் என்றும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம பரம் கூறியுள்ளார்.

திருச்சியில் கூடங்குளம் அணுமின் நிலையம் திறப்பு, இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு மற்றும் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்கு பாராட்டு என மூன்று விடயங்களை உள்ளடக்கி முப்பெரும்விழாவை காங்கிரஸ் கட்சி நடத்தியது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது,



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆளுங்கட்சிக்கும், எதிர்கட்சிகளுக்கும் பொறுப்புகள் உள்ளன. அதைக் காங்கிரஸ் மதித்து நடக்கிறது.

19 ஆம் பக்கம் பார்க்க

# கிணற்றில் வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(காரைநகர்)

கிணற்றில் வீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவித்து நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலம் ஒன்று ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர் களபூமியைச் சோந்த இராமநாதன் அமிர்தலிங்கம் (வயது - 40) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். காரைநகர் டிப்போவில் சாரதியாகப் பணியாற்றும் இவர் சிறிது காலம் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார்.

இன்று மீண்டும் பணியில் இணையவிருந்த நிலையிலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு

19 ஆம் பக்கம் பார்க்க

# தனியார் பேருந்தின் அசண்டையீனம் நடுத்தெருவில் பயணிகள் அவலம்

(வவுனியா)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக தனியார் பேருந்தொன்றில் ஏறிய பயணிகள் சுமார் இரண்டரை மணித்தியால காத்திருப்புக்குப் பின்னர் பஸ் புறப்படாமலேயே மீண்டும் வவுனியாவிலேயே இறக்கிவிடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றிரவு வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி புறப்படவிருந்த NP - ND - 8219 இலக்க தனியார் பேருந்தொன்றில் சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 55 பேர் ஏறியமர்ந்தனர். பஸ்சிற்குள் திரைப் படமும் காண்பிக்கப்பட்டது. நேரம் செல்லச்செல்ல பஸ் புறப்படாத காரணத்தால் பயணிகள் நடத்துனரிடம் விசாரித்துள்ளனர்.

மதுபோதையில் நின்ற நடத்துனர் பொறுப்பாக எந்தப் பதிலையும் வழங்கவில்லை. பொறுமையிழந்த பயணிகள் அங்கு நின்ற பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் தலையிட்டு விசாரணை மேற்கொண்டனர்.

அதன் பின்னரே குறித்த பஸ்சிற்கு வழி அனுமதியும் இல்லை என்பது தெரியவந்தது. இந்த நிலையிலும் பஸ் உரிமையாளர் பொறுப்பற்ற வகையில் பதிலளித்ததாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# திருமலை, வத்தளையில் இருவர் கடத்தல்



(திருகோணமலை)

திருகோணமலை, உப்புவெளி, அன்புவெளிபுரம் பகுதியில் இளைஞரொருவர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 6 ஆம் திகதி காலையில் வானொன்றில் வருகைதந்த குழுவினரால் குறித்த நபர் கடத்தப்பட்டதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ரவீந்திரன் ராமசாமி என்ற 28 வயதான குறித்த நபர் திருகோணமலை தனியார் வைத்திய சாலைக்கு அருகில் வைத்து கடத்தப்பட்டதாகத்

19 ஆம் பக்கம் பார்க்க

# கடை உடைத்து திருட்டு யாழ். நகரில் சம்பவம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கு அண்மித்ததாக மணிக்கூட்டு வீதியில் உள்ள மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையமொன்றில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச்சம்பவத்தின் போது சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் களவாடப்படுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனமான பூட்டுக்கள் போடப்பட்ட இரும்பினாலான சுருக்குக் கதவுகளின் முன்பக்கம் உடைக்கப்பட்டே இக்களவு இடம்பெற்றுள்ளது.

காலையில் வர்த்தக நிலையத்தை திறப்பதற்காக வந்த உரிமையாளர், பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தமையைக் கண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கம்பலாவில் நடைபெற்ற அனைத்து நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக

19 ஆம் பக்கம் பார்க்க

விநாயகர் துணை





புங்குடுதீவு மேற்கு - கொம்மாபிட்டி - மூத்தநயினார்புலம்

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

**கொடியேற்றம் 05.04.2012**

திருச்சிற்றம்பலம்
வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத மூன்றுவிழி ஐந்துகர நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.
திருச்சிற்றம்பலம்

**தேர் : 13-04-2012**
**தீர்த்தம் : 14-04-2012**

**விநாயகப்பெருமான் மெய்யடியார்களே,**

நிகழும் கர வருஷம் பங்குனி மாதம் 23 ஆம் திகதி (05.04.2012) வியாழக்கிழமை சதுர்த்தசி திதியும், உத்தர நட்சத்திரமும் கூடிய சுபவேளையில், முற்பகல் 11.00 மணிக்குத் துவஜாரோகணமாகி (கொடியேற்றம்) விசேட பூசைகள் சந்தியாவாஹணமும் நடைபெற்றது. தொடர்ந்து பத்து நாட்களும் திருவிழா நடைபெறுவதற்கு இறையருள் கிடைத்துள்ளது. நந்தன வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (13.04.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு இரதாரோஹண வைபவம் (தேர்த்திருவிழா) நடைபெற்றுப் பச்சை சாத்துதல், தீபாராதனைகள் நடைபெறும். 14.04.2012 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம் (தீர்த்தத் திருவிழா) நடை பெறும். மாலை திருவூஞ்சல் துவஜாவரோஹணம் (கொடியிறக்கம்) நவசந்தி விசர்ஜனம், சண்டேஸ்வர உற்சவம், சிவாச்சாரிய உற்சவம் நடைபெறும். 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை பிராயச்சித்த அபிஷேகம், வைரவர் பொங்கல், பூசையுடன் திருவிழாக்கள் நிறைவு பெறும். விநாயகப் பெருமான் அடியார்கள் வருகை தந்து தரிசித்து; பால், தயிர், இளநீர், புஷ்பம் முதலிய சிவத் திரவியங்களை கொடுத்துதவி எம் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## கிரியாகால நிகழ்வுகள்

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| காலைப்பூசை | - 08. 00 மணி | மாலைப் பூசை | - 5.00 மணி |
| கும்பபூசை | - 09.00 மணி | கொடித்தம்ப பூசை | - 5.30 மணி |
| கொடித்தம்ப பூசை | - 10.00 மணி | மங்கள வாத்தியம் | - 6.00 மணி |
| வசந்தமண்டபப் பூசை | - 11.00 மணி | கூட்டுப்பிரார்த்தனை | - 7.00 மணி |
| சுவாமி திருவீதியுலா | - 11.30 மணி | வசந்த மண்டபப் பூசை | - 7.30 மணி |
| | | சுவாமி திருவீதியுலா | - 8.00 மணி |

**விசேட உற்சவ காலங்களில் காலை, மாலை நேரங்களில் மாற்றங்கள் உண்டு**

**ஆலய குரு**
சிவஸ்ரீ சிவசுப்பிரமணி ரமேஷ் சர்மா

**மஹோற்சவ குரு**
கிரியாபானு சிவஸ்ரீ நா.குகனேசக்குருக்கள்
(சுன்னாகம்)

மூத்தநயினார்புலம்,
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்,
புங்குடுதீவு - 04.

சுபம்

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினரும்,
திருவிழா உபயக்காரர்களும்.

(C/1552)

ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல, விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதுதான்.

-பொன்மொழி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## உண்மைகளைப் பேசுவது எப்போது?

தமிழ் மக்களாகிய நமது உள்ள உட்கிடக்கை என்ன? எதை நாம் தீர்வு என்று ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்? நமக்கு என்னதான் வேண்டும்? இதையெல்லாம் வெளிப்படையாக விவாதித்து சாதக பாதகங்களை அலசி நமக்குள் ஒரு முடிவை அடைந்திருக்கிறோமா? அல்லது அப்படி ஒரு முடிவெடுக்கத் தயாராகவேனும் இருக்கிறோமா?

நமது விருப்பம், சமஷ்டி? சுயநிர்ணயம்? வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி? தமிழீழம்? என்னவாகவும் இருக்கட்டும். அதனதன் நடைமுறைச் சாத்தியம் என்னவாக இருக்கிறது என்று நமக்குள் உரையாடி விளக்கவோ விளங்கிக்கொள்ளவோ முயல மாட்டோமா?

உலகப் போராட்டக் குழுக்கள் எதனிடமும் இருக்காத வகையில் முப்படைகளும் கொண்டவர்களாய் நம் பலம் பற்றி இறுமாந்திருந்த போது கூட பெற்றுக்கொள்ள முடியாமல் போன எதை இப்போது பெற்றுவிட எதிர்பார்க்கிறோம்?

உலக நாடுகள் எதை நமக்கு எடுத்துத் தந்துவிடும் என்று நம்பி நாம் பேச்சுவார்த்தைகளை முறித்துத் திரும்பிக் கொண்டிருக்கிறோம்? சர்வதேசம் இங்கே எதைச் சாதிக்கப் போகிறது என்று மக்களுக்கு எதிர்பார்ப்பையும் நம்பிக்கைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்? நம் எல்லோர் மனங்களும் ஏதோ ஒரு உரலை இடித்துக் கொண்டிருப்பது எந்த அவலை நினைத்து?

இந்தத் தீவில் சிங்கள மக்களை முழுதாக மறுத்தொதுக்கி விட்டு நமக்கென்றொரு ஆட்சியதிகாரத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமா? அது நடைபெறக் கூடியதுதானா? அவர்களையும் பொருட்படுத்தி நமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன? பேச வேண்டியது என்ன?

உலக அரசியல் விவகாரங்களில் நியாயம் அநியாயம் என்பவற்றுக்கெல்லாம் என்ன பொருள்? நம்மைத் தூண்டி விடுகிறவர்கள், அனுதாபம் காட்டி உணர்ச்சியேற்றுபவர்கள், நாம் மட்டுமே ராட்சசர்கள் நடுவே இருப்பதாகச் சொல்லி நாம் போரிட்டழிய ஞாயம் வழங்குபவர்கள் எல்லோரும் உண்மையாக நியாயத்தைக் காப்பாற்றுபவர்களா? நமக்கு வாய்த்திருப்பதுதான் பேசவோ சேர்ந்து வாழவோ முடியாத கொரூர எதிர்த்தரப்பு. அதுதான் உண்மையா?

ஹிட்லரை அரக்கன் என்று பெயர் சூட்டி அவனுக்கு முடிவு கட்டிய தர்மிஷ்ட ஜனநாயக நாடுகள், தாம் என்ன செய்து கொண்டிருக்கின்றன. வாய் ஓயாத மனிதாபிமான வேஷப் பேச்சுகளின் பின்னால் நடந்து கொண்டிருக்கும் மனிதப் படுகொலைகள்தான் எத்தனை? சில மனித உரிமை அமைப்புகளின் கணக்குப்படி ஈராக்கில் உயிரிழப்பு 12 இலட்சங்களைத் தாண்டுகிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானிலும் நிலைமை அதற்குச் சளைத்ததல்ல. வியட்நாமில், சிலியில், எல்சல்வடோரில், பாலஸ்தீனத்தில்... பரந்த மனப்பான்மை கொண்டதாகச் சொல்லப்படும் பிரான்சும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் கூட அல்ஜீரியாவில், ருவாண்டாவில் செய்துமுடித்த பாதகங்கள் சிறியவையல்ல.

நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் கஷ்டப்படக் கஷ்டப்பட வேறு யாரும் உதவிக்கு வரக்கூடும் என்று பெருங்குரலெடுத்துப் புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாம்தான் பேசியாக வேண்டும். தீர்வு கண்டாக வேண்டும்.

எங்களை நாங்களே அழித்துக் கொள்ளும் விதமாக, வாழ்வைச் சிதைத்துக் கொள்ளும் விதமாக எதிர்ப்பை வைத்துக் கொள்வது புத்தியில்லை. பழைய கனவுகளும் மாறாத 'இலட்சியப் பார்வை'யும், பெறச் சாத்தியமான தீர்வின்பால் நம்மை நகர விடுவதாயில்லை. உலகில் நமக்கு மட்டுமே அநீதிகள் நடந்திருப்பதாக அரற்றி, மக்களுக்கு வதை வாழ்வை அளித்துக் கொண்டிருப்பதாகவே முடிகிறது.

இதிலிருந்து வெளியே வந்து உண்மைகளைப் பேசுவது எப்போது?

- ஆசிரியர்.

# அரசின் பாரிய அபிவிருத்தி பிரச்சினைகளைத் தீர்க்கும்

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல மக்களினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய வகையில் அரசாங்கம் பாரிய அபிவிருத்திகளைச் செய்துள்ளது என்றும் நாட்டில் பாரிய மாற்றங்களை மேற்கொண்டிருப்பதாகவும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். மாத்தறைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், அதற்கு செயல்வடிவில் அரசாங்கம் பதில் வழங்கியிருப்பதாகவும் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன குறிப்பிட்டார்.

## பாவனைக்கு உதவாத அரிசி மூடைகள் மீட்பு

மனித பாவனைக்கு உதவாத, காலாவதியான 152 அரிசி மூடைகளை புறக்கோட்டையில் இருந்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவை மீட்கப்பட்டதாக அதிகார சபையில் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ஐந்தாம் குறுக்குத் தெருவில் உள்ள கடையொன்றில் இருந்தே இந்த அரிசி மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் அந்தக் கடையில் இருந்து திகதி மாற்றம் செய்யப்பட்ட உணவு வகைகளின் பொதிகளும் மீட்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

## மத்திய வங்கி அறிக்கை இன்று வெளிவரும்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை இன்று வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் 62ஆவது அறிக்கையினை, ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கையில், பொருளாதார வளர்ச்சி, புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கொள்கை விளக்கங்கள், மத்திய வங்கியின் கணக்கு விபரங்கள் மற்றும் எதிர்காலச் செயறபாடுகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பண்டிகைக் கால பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் தமது பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொலிஸ் ஊடகத்துறைப் பேச்சாளர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் காணாமல் போவது போன்றவை தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகிறது.

இதனிடையே, வாகன விபத்தினை தவிர்க்கும் பொருட்டு நாடளாவிய ரீதியில் விசேட போக்குவரத்துத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கில் கல்வி அபிவிருத்தி; ஆளுநருடன் விரிவான பேச்சு

(திருநெல்வேலி)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்த பல்வேறு ஆலோசனைகளை கிழக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைத்துள்ளது.

கடந்த 04 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம அவர்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் சந்தித்து கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்த பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்தனர். அவற்றை ஏற்றுக்கொண்ட ஆளுநர் கல்வி அமைச்சு சார்ந்த அதிகாரிகளை உடன் அழைத்து பணிப்புரை வழங்கினார்.

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களங்களில் உள்ள கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்க பதில் கடமை புரிவோருக்கு நியமனம் வழங்கப்படவேண்டுமென்றும், ஆசிரிய ஆலோசகர்கள் முறைப்படி நியமிக்க வேண்டும் என்றும், ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் திட்டவரைபுகளை இடமாற்றச்சபையில் ஆலோசித்த பின்னரே இடமாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்றும், திணைக்களங்களில் தேங்கியுள்ள பாடசாலை ஆசிரியர்களின் தேவைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படவேண்டும் என்றும், ஆலோசிக்கப்படும் திட்டங்கள் முன்வரைபுகளாக ஆசிரிய தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனவும், பற்றாக் குறையாகவுள்ள பாடங்களுக்கான ஆசிரிய நியமனங்களைத் தாமதப்படுத்தாமல் உடன் வழங்க வேண்டும் என்றும், எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லாமல் அவை நியாயமாக நடைபெற வேண்டும் எனவும், இலங்கைத் தமிழராசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆளுநரிடம் எடுத்துரைத்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர் கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாக தாம் எடுக்கும் முயற்சிகளுக்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும், அரசியல் தலையீடுகளுக்கு கிழக்கு மாகாணக்கல்வித்துறையில் இடமில்லையென்றும், இதுவரை இருந்து வந்த குறைபாடுகள் இனிமேலும் இருக்காது எனவும் எடுத்துக் கூறியதுடன், உடனிருந்த அதிகாரிகளுக்கும் விபரித்தார். (137)

# நேற்றைய வீதி விபத்துக்கள் இருவரை பலி கொண்டது

குருநாகல் - புத்தளம் பிரதான வீதியின் வானவீதிய பிரதேசத்தில் நேற்று லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

குருநாகலில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த லொறியுடன் எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் அதிகாலை 5 மணியளவில் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், மோட்டார் சைக்கிளின பின் அமர்ந்து சென்றவர் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

லொறியின் சாரதியை கைது செய்துள்ள குருநாகல் பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, மின்னேரியா, மட்டக்களப்பு - மரதன்கடவல பிரதான வீதியின் 45ஆவது கிலோமீற்றர் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30மணி அளவில் வாகனம் ஒன்று சைக்கிள் ஒன்றுடன் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இவ்விபத்தில் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றையவர் ஹிங்குராங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தீவகப் பகுதிகளில் கற்பிக்க தயக்கம் காட்டும் ஆசிரியர்கள்

## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நடாளுமன்ற உறுப்பினர் உதயன்



மாணவர்களின் பல்துறை ஆளுமையை வளர்ப்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 4ஆம் திகதி வித்தியால அதிபர் க.தேவராசா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; தீவக பிரதேசத்து மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதவாறு பாரிய தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இப் பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் பல்துறை சார்ந்த செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கான பௌதீக வளங்களையும் உபகரணங்களையும் நாம் வழங்கி வருகின்றோம்.

இருந்த போதிலும் இப் பிரதேசங்களில் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தயக்கம் காட்டி வருவதுடன், பெருந்தொகையான ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். இதனால் மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்து வருகின்றது என்றார்.

இந் நிகழ்வில் வித்தியாலய பயன்பாட்டிற்கான பல இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் ஒகன் வாத்திய கருவி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் ஊர்காவற்றுறை பிரதேச இணைப்பாளருமான ஜெயகாந்தன், தீவக வலய கல்வி அலுவலக உத்தியோகத்தர் பரதன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சோமசேகரம், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மல்லாவியில் குடிநீருக்கு தட்டுப்பாடு

(மல்லாவி)

மல்லாவிப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் கிணற்று நீர்வற்றத் தொடங்கியுள்ளதோடு, உவர் நீராகவும் மாறி வருகின்றது. மேற்படி மல்லாவி பகுதியில் பல கிராமங்களில் இந்நிலை தோன்றியுள்ளமையால் மக்கள் குடிநீர் பெறுவதற்கு அயல் கிராமங்களுக்குச் சென்றுவருகின்றனர்.

அங்கு முப்பதுக்கும் மேற்பட்ட குழாய்க்கிணறுகள் இருந்தும் அனைத்தும் செயலிழந்து காணப்படுகின்றன. 1995 ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையினால் குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து மல்லாவிப் பகுதியில் வாழ்ந்தபோது மேற்குறித்த கிணறுகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது எனினும் இக் கிணறுகளைத் திருத்திக் கொடுப்பதற்கு யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. ஆனால் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் முறையிட்டும் எந்தவித பய னும் கிடைக்கவில்லை என மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (143)

# குறுக்கே பாய்ந்தது நாய் மோட்டார் சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்கே நாய் ஓடியதில் மோட்டார் சைக்கிள் சறுக்குண்டு விழுந்து இரு பாடசாலை மாணவர்கள் காயம அடைந்துள்ளனர். செங்குந்தா பாடசாலை வீதியில் கடந்த வியாழக்கிழமை 11.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கு.அமுதீசன் (வயது-16), த.துஷிகாந் (வயது-20) ஆகிய இருவரில் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும், ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (எஸ்)

# பழையகண்டி வீதி அகலிக்கப்படவுள்ளது

காரைநகர் - பழையகண்டி வீதி பல இலட்சம் ரூபா செலவில் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

இவ் வீதியை 20 அடிவரை அகலிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு பிள்ளையார் சன சமுக நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமது வேலிகள், மதில்களை பின் தள்ளி வீதி அகலிப்புப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதென பொதுமக்களால் தீர்மானிக்கப்பட்டது. (10)

# 8 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையத்தினால் PS.DG திட்டத்தின் கீழ் ஒருமாத கால கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிலையத்தில் வட பிராந்திய கால் நடை உதவிப்பணிப்பாளர் திருமதி வி. அமிர்தலிங்கம் முதல் கட்டமாக 8 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கி வைத்தார்.

இதில் ஜே/408 கிராம அலுவலர் பிரிவில் கோவிந்த பிள்ளை தர்சினி, ஜே/406 பிரிவில் சிவப்பிரகாசம் ஜீவநேசன், ஜே/ யலிதாமலர் ஆகிய இரு பயனாளிக்கும், ஜே/416 பிரிவில் ரி.சத்தியதேவி,தி. சிவபாக்கியம் ஆகிய இருவருக்கும் ஜே/411 பிரிவில் புஸ்பரூபி என்ற ஒரு பயனாளிக்கும் ஜே/398 பிரிவில் ஜெகதீஸ்வரி ஆகிய பயனாளிக்கும் தலா 20 குஞ்சுக்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

இதைவிட மேலும் கோழிக் குஞ்சுகள் 40 பயனாளிக்கு வழங்கப்படவுள்ளதாக கால் நடை வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (116)

# வல்வெட்டித்துறை நகரசபை ·கோலப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையின் நூலக அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளில் ஒன்றாக தமிழ்,சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கோலம் அமைத்தல் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களினதும் பாடசாலைகளினதும் விபரங்கள் நகராட்சி மன்றத்தின் நூலகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளன.

விபரம் வருமாறு:

சி. சிவசுதன், (யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்), ச. பவனராஜ், (யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்), பா.மேகலா, (யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்),சி.நிரோசன் (யா/ வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி), இ.லக்சாயினி, (யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.),இ.அஜந்திகா, (யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.), அ.கௌசல்யா (யா/ வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி) ஜெ.நிவேதிகா (யா/ வல்வை மகளிர் ம.வி.), தே.டர்சினி, (யா/கம்பர்மலை வித்தியாலயம்), யு.டிலேசியா , (யா/கம்பர்மலை வித்தியாலயம்).

# களை கட்டுகிறது புதுவருட வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் - சிங்கள புத்தண்டை முன்னிட்டு யாழ். நகரின் பல்வேறு இடங்களிலும் தென் இலங்கை வியாபாரிகள் வியாபார நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ். நகரின் பிரதான வீதிகளில் உடைகள், ஆபரணங்கள், உணவுப்பண்டங்கள் என பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை, யாழ். முனியப்பர் வீதியில் சிறு கொட்டகைகள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது. புத்தாண்டை அண்மித்த நாட்களில் யாழ். குடாநாடு முழுவதிலும் தென் இலங்கை வியாபாரிகளின் வியாபாரம் களைகட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்)



*பொறிக் கடவை அம்மன் ஆலயத்தில் பங்குனித்திங்கள் 3ஆம் வார வேள்வி நடைபெற்றது. அப்போது பத்துக்கும் மேற்பட்ட பறவைக் காவடிகள் நாட்டின் பல பகுதியில் இருந்தும் வந்து சேர்ந்தன. அதில் மீசாலைப் பகுதியில் இருந்து பூநகரிப்பாதையூடாக இவ்வாலயத்தை வந்தடைந்த பறவைக்காவடியைப் படத்தில் காணலாம். (112)*

# தேசிய கலை இலக்கிய விழா கவிதை, கட்டுரைப் போட்டிகள்

(பருத்தித்துறை)

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் தேசிய கலை இலக்கிய விழா நடாளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன், பாடசாலை போட்டிகளாக கட்டுரை மற்றும் கவிதைப் போட்டி, கவிதைப்பாடல் போட்டி ஆகியன; கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இதில் 'விந்தையான மனிதன் எதிர்கால சமுதாயத்திற்கு' என்னும் தலைப்புக்கு பொருத்தமான சிந்தனைக்கு ஏற்ப கட்டுரை, கவிதை இடம் பெற வேண்டும். கவிதைப்பாடல் போட்டியில் தூதுக் காவியங்கள், நாட்டார்நாடகங்கள், தூதுக் கூத்துக்கள் அல்லது பலதரப்பட்ட நாட்டார் பாடல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 செய்யுள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் கையெழுத்துப்போட்டி கனிஷ்டபிரிவுக்கு மட்டும் அதாவது 6 - 10 வயது சிறுவர்கள் மாத்திரம் பிழையின்றி எழுத்துக்களை உபயோகித்தல் வேண்டும்.

திறந்த போட்டிகளாக பாடல் ஆக்கம் (விரும்பியதலைப்பு) நாட்டார் கலை, கற்றல் போட்டி (ஒவ்வொரு பிரதேசத்திற்குரிய 10 வகையான நாட்டார் கலைகளின் தொகுப்பு) இலக்கிய விவரணப் போட்டி (தெரிவுசெய்யப்பட்ட நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு, கவிதை, பாடல், மேடை நாடகம் தொடர்பான விமர்சனம்) சிறுகதை, விரும்பிய தலைப்பு) கவிதை ஆக்கப்போட்டி (விரும்பிய தலைப்பில் 10 செய்யுள்கள் புதுக் கவிதை) சிறுவர்கதை ஆக்கப்போட்டி (விரும்பிய தலைப்பு) ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இவ்வாண்டு இலக்கிய விழாவை முன்னிட்ட போட்டிகள் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை பிரிவுக்கான கவிதை, பாடல் மற்றும் கையெழுத்துப் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது. இதற்குரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து மே மாதம் 05 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

சிறந்த பிரிவுக்கான போட்டியாளர்கள் விண்ணப்பத்தையும் ஆக்கத்தினையும் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக கலாசார பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏனைய பாடசாலைப் பிரிவுக்கான போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு முடிவுகள் அந்தந்த பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் கலாசார அபிவிருத்தி அலுவலருக்கு மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும் என அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (109,116)

# தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும்

## வடமராட்சி மீனவர்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பிரதேச கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட கடற்தொழில் உபகரணங்களைக் கொண்டு கடற் தொழிலில் ஈடுபடுவதால் தாம் தொழில் செய்ய முடியாது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தடைசெய்யப்பட்ட உபகரணங்கள் பயன்படுத்துவதை முற்றாக நிறுத்துவதற் குரிய நடவடிக்கைகளை கடற்தொழிலாளர கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கடற் தொழில் திணைக் களம் ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் சமாசத் தலைவர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த சங்கப்பிரதிநிதிகள் எமது பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட தொழிலில் சிலர் ஈடுபடுவதினால் நாம் பகல், இரவு நேரங்களில் சூடை வலை, அறுக்கொட்டியான், கரைவலைத் தொழில்களை செய்யமுடியாத நிலையில் உள்ளோம். தடை செய்யப்பட்ட தங்கூசிவலை, சுருக்குவலை, கடலில் குளை போட்டு மீன் பிடித்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் போது சாதாரண தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே தடை செய்யப்பட்ட கடற்தொழில் உபகரணங்களைக் கொண்டு கடற்தொழில் செய்வதை எமது பிரதேசத்தில் முற்றாக நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். (70)

# குருபூசைத்தினம்


(யாழ்.நிருபர்)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு - பாணாவிடை சிவன் தேவஸ்தான திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை நூற்றாண்டு தினவிழா எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நாவுக்கரசர் பற்றிய விசேட சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் மற்றும் மலர் வெளியீடு ஆகிய நிகழ்சிகள் நடைபெறவுள்ளன.

காலையில் சிவன் கோயிலில் தீர்த்த உற்சவமும் அதனைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனையும் இடம் பெறும். இரவு நிகழ்ச்சியாக விசேட மேளக்கச்சேரியும், இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன. (10)

## பரமர் சங்கமம்



‘சித்திரம் ஒன்றைப் பிரசுரித்து இந்தப் படத்தில் பாம்பு, புறா, மீன், சீப்பு, வாழை, தென்னை, பலா, சிங்கம், குதிரை அத்தனையும் அடங்கி யுள்ளது கண்டுபிடியுங்கள் என அறிவிக்கப் பட்டிருக்கும்.

இப்படித்தான் ஒரு சிறு கதையிலோ, நாவலிலோ, கவிதையிலோ அது குறிப்பிட்டு சொல்லுகின்ற கருப்பொருளை அன்றி வேறு பலவிதமான கருப்பொருளைச் சொல்வதாக சிலர் பீற்றிக்கொள்வதை சாதாரண இலக்கிய உலகில் காணலாம்.

அதாவது தமக்குப் பிடித்த ஒருவரை உயர்த்த வேண்டுமானால் இப்படியெல்லாம் இல்லாததைச் சொல்லிப் புகழ்ந்து திரிவார்கள். அதுவே அந்த இலக்கியப்படைப்பின் நோக்கத்தை பாழடிப்பதாக அமைந்து விடும்.

தம்மால் ஏற்றுக் கொள்ளப்படாத, புறக்கணிக்கப்படுகின்ற படைப்புக்கள் தரமானவை அல்ல. அவை வெறும் காகிதப் பூக்கள் என்பார்கள்.

எதுவுமே இல்லாத உப்புச் சப்பற்ற படைப்பை அற்புதமானது; உலகத்தரத்தை எட்டிப்பிடித்து விட்டதென தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவர். இவர்களின் இருதலைக் கொள்ளி எறும்பு நிலைக கூற்றுக்களை கேட்டு ஏமாறுபவர்கள் நல்லிலக்கியம் எது என்பதை கண்டறியப் பல வருடகாலம் செல்லும்.

முன் சொன்னவர்களால் தலையில் தூக்கிவைத்து ஆடிய படைப்புகள் வந்த சுவடும் தெரியாமல் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாமலும் போய் விடுவதே வழக்கமாக இருக்கும்.

இத்தகைய இலக்கியப் போக்குடையவர்களுக்கு எதிலுமே பிடிப்பு இருக்காது. எதிர்பார்க்குமாப்போல் படைப்புக்கள் அமைவதில்லை என்றே பிரஸ்தாபித்துக் கொள்வார். இலக்கியம் தேடலுக்குரியதாக இருக்க வேண்டும். சொல்வதை வாசகன் நேரடியாக புரிந்து கொள்ளக் கூடாது.

வசதிக்கு ஏற்றமாதிரி சொல்லப்பட்ட விசயத்தை வேறோரு பொருளைக் கற்பித்து ரசித்து புரிந்து கொள்வதுடன் மற்றவர்களுக்கும் அதனைக் கூறிக் குழப்பிவிட வேண்டும்.

எதுவுமே புரியாத மொழியில் எவரதும் படைப்புக்கள் வந்து விட்டால அதனை விட்ட அற்புதமான இலக்கியப்படைப்புக்கள் இதுவரையில் தமிழில் வெளிவந்திருக்கவில்லை; அதனைத் தெரிந்து ரசிக்கவும் பொருள் கொள்ளவும் தனியாக இனி இலக்கியத்தைப் படித்து பரிச்சயம் பெற வேண்டுமெனப் புகழ்ந்துரைப்பார்.

அதையே சில மாத வருட இடைவெளியில் தோல்வி கண்ட இலக்கியப் படைப்பென ஏற்றுக் கொள்ளும் நுகர்வோர் பலரை நீங்கள் சந்திச்சிருப்பீர்கள்.

பலருடைய இத்தகைய விமர்சனங்களை கேட்ட, வாசித்துள்ள இலக்கிய நுகர்வாளர்களால் எப்படித்தான் நல்ல இலக்கியம் எது? நலிவு இலக்கியம் எது? நச்சு இலக்கியம் எது? எண்டு கண்டு கொள்ள முடியும்?

ஒருவர் இருக்கிறார் அவர் எவருடைய படைப்புக்கள் வந்தாலும் நொட்டை சொட்டை சொல்வது தான் குணம். புத்தக வெளியீடு ஒன்றில் நூலாசிரியர் சொன்ன கதையை தனது எண்ணப்படி வகுத்துக் கொண்டு அது அப்படியல்ல இப்படி எண்டு பல பிழைகளை வரிசைக் கிரமப்படுத்திக் கொண்டார்.

நூலாசிரியர் ஏற்புரையில் “வரைவிலக்கணமொன்றுண்டு விமர்சகன் ஓடக் கற்றுக் கொடுக்கும் முடவன்” என்று மடக்கினார்.

அது வரையில் அந்த வரை விலக்கணத்தையே அறிந்திராத பேச்சாளர் மேடையில் அசடு வழிந்தது தான் மிச்சம் பாருங்கோ...

# பெரிய புராணம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நாட்டு மக்களுக்கு நன்மை வேண்டிப் பிரார்த்தித்து மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

அந்த வகையில் கடந்த 14ஆம் திகதி முதல் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள பராமரிப்பில் நிருவகித்து வரும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பன்னிரெண்டாம் திருமுறை பெரிய புராண முற்றோதல் தற்பொழுது தினமும் மாலை 4.30 மணிமுதல் நடைபெற்று வருகின்றது .என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை கிளையின் பொதுக்கூட்டமும் பணிப்பாளர் சபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இதில் தலைவராக சு.ஜெனார்த்தனன், உப தலைவராக மு.ஜெகதேவன், செயலாளராக வே.சுப்பிரமணியம், நிர்வாக சபை உறுப்பினர்களாக க.கிருபாகரன், க.பன்னீர்ச்செல்வம், செல்வி சி.கிருசாந்தி ஆகியோரும் தொழில் நுட்ப ஆலோசகராக டாக்டர் பி.யூலியானா தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி தெரிவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் முன்னிலையில் இடம்பெற்றதாக பொது முகாமையாளர் செ. சுபேந்திரா தெரிவித்துள்ளார். (116)



வலிகாமம் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வில் சீருடைகளைப் பெற்றுக் கொண்ட சிறார்களுடன் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வ.கே.அருந்தவநாதன், கொத்தணித்தலைவர் செ.செல்வராசா, சமாசத்தலைவர் நா.கணேசன், மாவட்ட கூட்டுறவு அலுவலர் இ.பாலச்சந்திரன், பொது முகாமையாளர் சுதாகரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கோப்பாய் பொலிஸாரின் புதுவருட நிகழ்வுகள்

(கோப்பாய்)

கோப்பாய் பொலிஸ் தமிழ், சிங்கள பிரிவு நடத்தும் புதுவருட விளையாட்டு கலை நிகழ் வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.வைத்தியதிலக தலைமையில் நடை பெறும் இந் நிகழ்வில் மரதன் ஓட்டம், கிறிஸ்மரம் ஏறுதல், தலையணைச்சண்டை, போர்த் தேங்காய் அடித்தல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் நடை பெறவுள்ளன

இந் நிகழ்வில் பங்குபற்ற விரும்பும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போட்டியாளர்கள் 0771242732 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# வாரச்சந்தைக் கண்காட்சி

(கிளிநொச்சி)

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி வங்கியினால் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி புத்தாண்டும் வாரச்சந்தையின் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் உதவித்திட்டங்களையும், கடனுதவிகளையும், தொழில் உபகரணங்களையும் பெற்ற பயனாளிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை கண் காட்சிப் படுத்துவதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் இச் சந்தை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இவ்வாரச் சந்தையும் கண்காட்சியும் நடை பெறவுள்ளது. (69)

# முரசின் இன்றைய பலன்

(09.04.2012 –திங்கட்கிழமை)

கர வருஷம் பங்குனி 27 ஆம் திகதி. திருத்தியை மாலை 6.37 வரை. நட்சத்திரம் விசாகம். மரணயோகம் முன்னிரவு 8.45 வரை. இராகுகாலம் 7.36 - 9.06 வரை. சுபநேரம் 12.06 - 1.36 வரை. எமகண்டம் 10.36 - 12.06 வரை. குளிகைகாலம் 1.36 - 3.06 வரை. நாலாவது பங்குனித் திங்கள்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | வெற்றிகள், அயலவரிடத்து எச்சரிக்கை, மேலதிகாரிகள் உதவி, தொழிற்கல்வியில் நாடடம். |
| ரிஷபம் | அதிகாரம், பொன்பொருள் சேரும், துன்பங்கள் அகலும், சுபகாரியங்கள். |
| மிதுனம் | சௌக்கியம், சோதனை காலம், பணப்பரிமாற்றத்தில் எச்சரிக்கை, அதிகாரிகள் நட்பு. |
| கடகம் | தீடீர் நன்மை, அனாவசிய அலைச்சல், எதிர்பாராத வீண்விரயம், அனுசரித்துப்போதல். |
| சிம்மம் | சுபகாரியம், நன்மை செய்தாலும் பாராட்டு இல்லை, நிம்மதிக்குறைவு, அதீத ஆனமீக ஈடுபாடு. |
| கன்னி | கோபமிகுதி, பயண அலைச்சல், குடும்பத்தவரை அனுசரிக்கவும், பொன் பொருள் சேரும். |
| துலாம் | சுபதினம், குறைவற்ற பணவரவு, நிதானம் அவசியம், எதிலும் சிந்தித்து செயற்படவும். |
| விருச்சிகம் | ஞாபக மறதி, பெற்றோர் உதவி கிட்டும், வாழ்வில் அன்னியோன்யம், நினைத்தது கை கூடும். |
| தனுசு | காரியானுகூலம், இடையிடையே உடல் உபாதை, இருப்பிட சுகம், இறை வழிபாடு. |
| மகரம் | உற்சாகமிகுதி, நண்பர்களால் உதவி, உடல் ஆரோக்கியம், தலையடுகளை தவிர்க்கவும். |
| கும்பம் | திடீர் நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி, சொத்துக்களால் அனுகூலம், அலைச்சல் மிகுதி. |
| மீனம் | முன்தினம் போல் கவனம் தேவை, இரவல் வாங்குவதை தவிர்க்கவும், நிம்மதிக்குறைவு. |

# தமிழ் - சிங்கள உறவை சிதைக்கிறது அமெரிக்கா



## சம்பிக்க சீற்றம்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியோ ஜெனிவா தீர்மானங்களுக்கு அடிபணிந்தோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இலங்கையில் தமிழ், சிங்கள உறவை சிதைக்க அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தலைமையில் சர்வதேசம் செயற்படுகின்றது.

எனவே, நாட்டிற்கு எதிரான சர்வதேசத்தின் சூழ்ச்சிகளுக்கு பின்னணியில் உள்நாட்டு துரோகிகள் பலரும் உள்ளனர்.

அதேபோன்று சம்பந்தன் குழுவினர் தேசிய அரசியலில் ஈடுபட வேண்டும். சர்வதேசத்திடம் கோள் சொல்வதால் எவ்விதமான நன்மைகளும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து மூன்றாவது தமிழ் சிங்கள புத்தாண்டை இலங்கையில் ஒற்றுமையாக கொண்டாடுகின்றனர்.

தற்போது நாட்டில் காணப்படும் நிலையான சமாதானம் மற்றும் சுதந்திரம் என்பவற்றை சீரழிக்க சர்வதேச நாடுகள் செயற்படுகின்றன. இதன் மூல சூத்திரதாரிகளாக அமெரிக்காவும் இந்தியாவுமே உள்ளன.

போலியான போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்று பல்வேறு குற்றச்சாட்டுகளை காரணங் காட்டி அமெரிக்கா இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுகின்றது.

ஜெனிவா பிரேரணையின் பின்னணியில் இலங்கையை பழிவாங்கும் நோக்கமே உள்ளது. எனவே மண்டியிட்டு சாவதை விட சண்டையிட்டு மடிவதே மேல். இதற்கு மூவின மக்களும் ஓரணியில் திரள வேண்டும்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் உள்நாட்டில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்றனர். அவர்களின் கலாசாரம் மற்றும் மரபுரிமைகள் என அனைத்தும் பாதுகாக்கப்படுகின்றன.

இதற்காக அரசாங்கம் மிகவும் பங்களிப்புடன் செயற்பட்டு வருகின்றது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் தமிழ் மக்களை புறம்தள்ளி விடவில்லை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

ஆனால் தமிழ் சிங்கள ஒற்றுமையை சீர்குலைக்க பாரியளவில் முன்னெடுப்புக்களை அந்நிய சக்திகள் மேற்கொள்கின்றன. இதற்கு இடமளிக்கக்கூடாது என்றார்.

## நிலத்துக்கு அடியில் கள்ளச் சாராயம் உற்பத்தி

(கொழும்பு)

பிலியந்தலை - மடபாத்த பிரதேசத்தில் நிலத்துக்கடியிலான சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையமொன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தியுள்ளனர்.

விமானப்படையின் புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்றிரவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிடுகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடபாத்த - துடுவை பகுதியிலுள்ள வீடொன்றில் நிலத்துக்கு அடியிலான இரகசிய அறையொன்றில் இந்த சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் இயங்கிவந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## சிலைகள் உடைப்பு; விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

மட்டக்களப்பில் மகாத்மா காந்தி உட்பட பலரின் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் 'விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரவித்துள்ளது.

"மட்டக்களப்பு நகரில் பல்வேறு முக்கிய சிலைகள் உடைக்கப்பட்டமை குறித்து வெளிவிவகார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இம்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்துமாறும் இச்சம்பவத்தின் குற்றவாளிகளையும் நோக்கங்களையும் இனங்காணுமாறு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வேறு இரு உள்ளூர் பிரமுகர்களின் சிலைகளும் வியாழனன்று தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மத்திய கிழக்கு பணிப்பெண்களுக்கு ஊதியத்தை உயர்த்த ஏற்பாடு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்காக செலலும் இலங்கை பணியாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக சவூதி அரேபிய மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார கூறியுள்ளார்.

தற்போது குவைத்தில் பணியாற்றும் இலங்கை பணிப்பெண் ஒருவருக்கு மாதாந்த சம்பளமாக 60 தொடக்கம் 65 குவைத் தினார்கள் கிடைக்கின்றன. இதனை 85 குவைத் தினாராக உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இறுதி இணக்கப்பாட்டினை எட்டும் வகையில் அடுத்த மாதம் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன் ஜோர்தானில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பளத்தை அதிகரிக்கும் போது பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசிய வீட்டுப் பணிப்பெண்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் என பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

## மதக்கலவரத்தை தூண்ட மட்டக்களப்பில் சதி

### சாடுகிறார் ஹிஸ்புல்லா



(கொழும்பு)

மடடக்களப்பில் மதங்களுக்கிடையில் குழப்பத்தை எற்படுத்தவே தீய சக்திகள் மட்டக்களப்பிலுள்ள உருவச்சிலைகளை உடைத்துள்ளனர். இது வன்மையாகக் கண்டிக்கப்படல் வேணடும் என சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு நகரின் மத்தியிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் இந்த உருவச்சிலைகள் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு வேண்டத்தகாத செயலாகும். இதை செய்தவர்களை பாதுகாப்புத் தரப்பினர் கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்.

கடந்த மாதம் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையினுள் திடீரென வைக்கப்பட்ட சரஸ்வதியின் உருவச்சிலையினால் குழப்ப நிலையும் முரண்பாடும் ஏற்பட்டது.

அந்தப் பாடசாலையில் நடைபெற்ற கட்டடத் திறப்பு விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைசசர் பசில் ராஜபக்ஷ கலந்துகொள்ள இருந்தபோது இந்த சிலை அப்பாடசாலையில் வைக்கப்பட்டது.

கிறிஸ்தவ மிஸனறியின் பாடசாலை என்பதால் இப்பாடசாலையிலிருந்து இந்த சரஸ்வதியின் உருவச்சிலையை அகற்ற வேண்டும் என கிறிஸ்தவ மட்டக்களப்பு மெதடிஸ்த்த திருச்சபையினர் தெரிவித்தனர். அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு இவ்விடயம் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த உருவச்சிலை அகற்றப்பட்டு பின்னர் அந்த சிலை அப்பாடசாலையில் மீண்டும் வைக்கப்பட்டது.

கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மட்டக்களப்புக்கு வருகை தந்தபோது இந்த உருவச்சிலை விவகாரம் தொடர்பாக கிறிஸ்த்தவ மெதடிஸ்த சபையினர் கல்வியமைச்சரை சந்தித்து இந்த பாடசாலை கிறிஸ்த்தவ மிஸனறியினால் உருவாக்கப்பட்ட பாடசாலை எனக்கூறி அந்தச் சிலையை அகற்ற பணிப்புரை வழங்குமாறு கேட்டனர்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலையில் வைக்கப்பட்ட இந்த சிலை விவகாரம் மதங்களுக்கிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்தது. மட்டக்களப்பு வின்சன்ட் பாடசாலையில் வைக்கப்பட்ட சரஸ்வதி சிலை விவகாரம் தொடர்பாக எனது கவனத்திற்கும் கிறிஸ்த்தவ மெதடிஸ்த்த திருச்சபையினரால் கொண்டுவரப்பட்டது.

மட்டக்களப்பில் மதங்களுக்கிடையில் ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கி சமூகங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்தவே மட்டக்களப்பில் வெள்ளிக்கிழமை அதிகாலை இந்த நான்கு உருவச்சிலைகளும் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

## எரிபொருள் பவுஸர்கள் செயற்பாட்டை நிறுத்தும்



### கட்டணங்கள் அதிகரிக்க காலக்கெடு

(கொழும்பு)

எரிபொருள் கொண்டு செல்வதற்கான கட்டணங்களை அதிகரிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கைகளை நிறைவேற்றப்படாவிட்டால் ஏப்ரல் 9, 10 ஆம் திகதிகளில் எரிபொருள் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை இடைநிறுத்தப்போவதாக இலங்கை தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அண்மையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து, தமது கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனத்திடம் தமது சங்கம் கோரிக்கை விடுத்ததாக இலங்கை தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா கூறினார்.

அவர்கள் வழங்கும் பணத்தில் எம்மால் செயற்பட முடியாதுள்ளது. அத்துடன் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக போக்குவரத்துடன் தொடர்பான அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன.

எமக்குரிய கட்டணங்களை 35 சதவீதத்தால் அதிகரிக்குமாறு நாம் கோரினோம். இக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்வரும் 2 நாட்களில் போக்குவரத்தை நிறுத்துவதற்கு எமது சங்கத்தின் நிறைவேற் றுக்குழு தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## பலஸ்தீன ஜனாதிபதி கொழும்பு வருவார்

(கொழும்பு)

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அல் அப்பாஸ் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அறுபதாண்டு கால பலஸ்தீன பிரச்சினை தற்பொழுது ஐக்கிய நாடுகள் அளவில் மேற்கொண்டு வரும் முன்னேற்றங்களைப் பற்றி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவார் என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொலிஸாரின் முறைகேடுகள் விசாரணைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

காவல்துறை உத்தியோகத்தர்களின் விஷமத்தனமான செயற்பாடுகள் மற்றும் காவல்துறையின் பல தரப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதன்படி, காவல்துறை ஆணைக்குழுவுக்கு 200 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சேனக வல்கம்பொல தெரிவித்துள்ளார்.

தற்போது, புதிய காவல்துறை ஆணைக்குழுவுக்கு அதிகாரிகளை நியமிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அதிகாரிகளின் நியமனங்கள் பூர்த்தியடையும் பட்சத்தில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சேன வல்கம்பொல தெரிவித்தார்.

# மோசடி

- Bill Van Auken

நன்றி: சோஷலிச வலைத்தளம்

**"சுதந்திரம்,** ஜனநாயகம், உலகளாவிய மனித உரிமைகள் ஆகியவற்றுக்கான மக்களின் அபிலாசைகளின் பக்கம் நம்மை நிறுத்திக் கொண்டு வரலாற்றின் சரியான பக்கத்தில் நாம் நிற்கிறோம் என்றே நான் கருதுகிறேன்" என்று அமெரிக்க வெளியுறவுச் செயலரான ஹிலாரி கிளிண்டன் எகனாமிஸ்ட் இதழுக்கு அளித்த ஒரு சமீப நேர்காணலில் அறிவித்தார்.

உலகில் அமெரிக்காவின் பாத்திரத்தை விபரிக்கையில் அவர் மேலும் சேர்த்துக் கொண்டார்: "நாங்கள் எழுந்து நின்று உரைக்கிறோம், நாங்கள் உலகளாவிய மதிப்புக்களின் பக்கம் நிற்கிறோம் என்று, அவை

> கொள்ளையிடும் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களை முன் நிறுத்த "மனித உரிமைகளை" மொத்தமாய்ப் பயன்படுத்துவதென்பது 1930களில் ஹிட்லர் ஜேர்மன் மக்களுக்கு எதிரான சூறையாடும் நடவடிக்கைகளை நிறுத்தவே தனது நடவடிக்கைகள் என்று கூறியதையும், அல்லது முசோலினி எத்தியோப்பியாவின் ஒரு "மிருகத்தனமான ஆட்சி"க்கு எதிரான ஒரு போரை நிகழ்த்திக் கொண்டிருப்பதாகக் கூறியதையும் விட வேறெதனை நினைவுக்குக் கொண்டு வர முடியும்.

அமெரிக்க மதிப்புகளுடன் ஒத்திசைபவையாக உள்ளன".

சுதந்திரத்தை ஊக்குவிப்பது மற்றும் உண்மையில் உலகளாவிய மதிப்புகளாகத் திகழ்கின்ற அமெரிக்க மதிப்புகளை ஏற்றுமதி செய்வதுஇவைதான் உலகில் அமெரிக்காவின் பாத்திரம் என்பதாகக் கூறும் இத்தகைய கருத்தாக்கங்கள் எதுவும் புதிது கிடையாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரவேசம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டின் நிறைவிலான ஸ்பானிய அமெரிக்கப் போர் வரை இந்தக் கருத்தாக்கங்கள் பின்நோக்கி காணத்தக்கவை.

இப்போது போல, அப்போதும் அவை அமெரிக்க நிதி மூலதனத்தின் நலன்களின் பேரில் ஆக்கிரமிப்புப் போர்களை, இராணுவக் கவிழ்ப்பு நடவடிக்கைகளை மற்றும் ஒடுக்குமுறையை நடத்துவதற்கான ஒரு வழக்கமான தத்துவ முகத்திரையாகத்தான் சேவை செய்திருக்கின்றன.

ரஷ்யப் புரட்சியாளரான லியோன் ட்ரொட்ஸ்கி 1924இல் மிகக் கடுமையுடன் குறிப்பிட்டதைப் போல, "அமெரிக்கா எப்போதும் யாரையாவது விடுதலை செய்து கொண்டே இருக்கிறது. அதன் வேலையே அது தான்."

கடந்த வாரத்தில், சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதை நோக்கமாய்க் கொண்டு உள்நாட்டுப் போரைத் தூண்டிவிடுவதற்கான ஒரு சாக்காகவும், ஈரானுக்கு எதிராய் போருக்குத் தயாரிப்பு செய்வதற்கான முகாந்திரமாகவும், வட கொரியா மற்றும் சீனாவுடன் இராணுவப் பதட்டங்களை மேலும் அதிகப்படுத்துவதற்கான ஒரு காரணமாகவும் ஒபாமா நிர்வாகம் மனித உரிமைகளைக் கையிலெடுத்தது.

உலகளாவிய மனித உரிமைகளின் பாதுகாவலனாய் அமெரிக்க அரசாங்கம் காட்டிக் கொள்வதென்பது ஒரு அப்பட்டமான மோசடி. மற்ற ஏதேனும் ஒரு நாட்டில் சுதந்திரம் ஜனநாயகம் எல்லாம் மீறப்படுவதில் அதுகோபமடைவதாகக் கூறிக் கொள்வதெல்லாம் அதிகமான இரட்டை வேடமாகும்.

சிரியாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஆசாத்தை அகற்றிவிட்டு டமாஸ்கஸில் கூடுதல் இணக்கமான, ஈரான்-விரோதமான ஆட்சியைநிறுவவேண்டுமென்பதற்காக, அமெரிக்கா துருக்கி உடன் நெருங்கி வேலை செய்து வருகிறது. சிரியாவில் தொடர்ச்சியாய் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி வந்திருக்கிற ஆயுதமேந்தியகிளர்ச்சிக் குழுக்களுக்கு மரண அபாய மளிக்காத உதவியை வழங்க இவ்விரு அரசாங்கங்களும் சேர்ந்துசெயல்பட்டு வருவதாக திங்களன்று நியூயோர்க் டைம்ஸ் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

சிரியாவில் மனித உரிமைகளின் பாதுகாவலனாய் தன்னை முன்நிறுத்திக் கொள்ளும் துருக்கி, தனது மக்கள் தொகையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாய் இருக்கும் சிறுபான்மையினரான துருக்கிய குர்துக்களுக்கு எதிராக குருதி பாயும் ஒடுக்குமுறைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. குர்து பிரிவினைவாதக் குழுவான PKK இன் முகாம்கள் என்று சந்தேகப்படுகிற முகாம்கள் மீது துருக்கிய ஜெட் போர் விமானங்கள் அடிக்கடி குண்டு வீசுகின்றன, இதில் தொடர்ந்து அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர்.

1984 முதலான இந்த மோதலில் சுமார் 40,000 பேர் தங்கள் உயிரைப் பலி கொடுத்திருக்கின்றனர், ஆனால் குர்துக்களின் தலைவிதி பற்றி அமெரிக்கா எந்தத் தெளிவான அக்கறையையும் வெளிப்படுத்தியதில்லை.

சிரியாவில் மனித உரிமைகளுக்காய் நடக்கும் புனிதப் போரில் அமெரிக்காவின் கூட்டாளியாக இருக்கும்மற்றொரு முக்கிய நாடு சவுதி அரேபியா. இது கத்தாருடன் சேர்ந்து கொண்டு சுதந்திர சிரிய இராணுவம் மற்றும் சிரிய தேசியக் கவுன்சில் போன்ற அமைப்புகளுக்குப் பணமும் ஆயுதமும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

சிரியாவிலான ஒடுக்குமுறைக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் சவுதி அரேபியாவின் சர்வாதிபத்திய முடியாட்சி தனது ஷியா இனத்தவர் அதிகம் வசிக்கும் கிழக்குப் பகுதியில் கிளர்ச்சியை நசுக்க ஈவிரக்கமற்ற ஒரு பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறது. சக்தி வாய்ந்த மத ஸ்தாபகத்தின் தலைவரான சவுதி முப்தி ஆட்சிக்கு எதிரான எவரொருவரின் தலையையும் வெட்டிக் கொண்டு வருவதற்கு சமீபத்தில் பத்வா அளித்தார். முன்னதாய், அவர் ஷியா கிளர்ச்சியாளர்கள் சிலுவையிலறையப்பட ஆலோசனையளித்திருந்தார்.

அண்டையில் யுஎஸ் ஐந்தாம் படைவரிசை அமைந்திருக்கும் பஹ்ரைனில், சவுதி ஆட்சியானது, அமெரிக்காவின் ஆதரவுடன், நாட்டின் ஷியா பெரும்பான்மையினரை ஆட்சி செய்வதோடு அவர்களுக்கு எதிராய் கடுமையான பாகுபாடு காட்டி வரும் சர்வாதிகார சுன்னி முடியாட்சிக்கு சவால் விடுக்கும் ஒரு மக்கள் இயக்கத்தை வன்முறை மூலம் ஒடுக்குவதற்கு தொடர்ந்துஆதரவளித்து வருகிறது. உலகளாவிய அமெரிக்க மதிப்புகள் இங்கே பொருந்துவதில்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இதற்கிடையில், எகிப்தின் இராணுவக் குழு மிருகத்தனமான அடக்குமுறைகளைத் தொடர்ந்து வரும் நிலையில், வெளியுறவுச் செயலரான ஹிலாரி கிளிண்டன், எகிப்தின் இராணுவ உதவிக்கு அந்நாடு ஜனநாயகத்தை நோக்கிய முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும் என்றிருக்கும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு. அமெரிக்க தேசிய பாதுகாப்பு நலன்கள் என்பதைக் கையிலெடுத்திருக்கிறார். அதாவது எகிப்தின் ஒடுக்குமுறை எந்திரத்திற்கு 1.3 பில்லியன் டொலர் அமெரிக்க உதவி சென்று சேர இருக்கிறது.

மனித உரிமைகளுக்கான இந்த உறுதிப்பாடு உண்மையிலேயே உலகளாவியதாக இருக்குமாயின், அது சொந்தநாட்டின் அருகில்தான் சக்தி வாய்ந்த வெளிப்பாட்டை கொண்டிருக்கும் என்றுதான் எவரொருவரும் எதிர்பார்ப்பார். ஆனால் அமெரிக்கா தனது "சொந்த கொல்லைப் புறம்" என்று வெகு காலமாய் கருதி வந்திருக்கக் கூடிய ஹோண்டுராஸில் அடிப்படை உரிமைகள் பற்றிய அமெரிக்காவின் அலட்சியத்தின் ஒரு அப்பட்டமான சாட்சியமாக ஹோண்டுராஸ் நிலவரம் இருக்கிறது.

2009 இல் ஜனாதிபதி மானுவேல் ஸெலாயாவின் தேர்ந்தெடுத்த அரசாங்கத்தைக் கவிழ்த்த இராணுவக் கவிழ்ப் புக்கு ஓசையின்றி தனது ஆதரவை அளித்திருந்த ஒபாமா நிர்வாகம், வந்த ஆட்சி ஏழை விவசாயிகளுக்கு, பத்திரிகையாளர்களுக்கு, மனித உரிமை ஆர்வலர்களுக்கு மற்றும் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்தி வருகின்ற தொடர்ச்சியான கொலை, சித்திரவதை, சட்டவிரோதக் கைது மற்றும்வன்முறை நடவடிக்கைகளுக்கு கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது. பிராந்தியத்தில் பெண்டகனின் மிகப்பெரிய தளத்தைக் கொண்டமைந்திருக்கும் ஹோண்டுராஸ் நாட்டில் இராணுவ ஒப்பந்தங்களுக்காகச் செலவிடும் தொகையையும் அந்நாட்டிற்கான இராணுவஉதவியையும் அமெரிக்கா அதிரடியான அளவில் அதிகரிப்பு செய்திருக்கிறது.

வெளிநாடுகளில் போர்களையும் ஸ்திரம் குலைப்பதையும் நியாயப் படுத் துவதற்குக் கையிலெடுக்கப்படுகிற இந்த உலகளாவிய அமெரிக்க மதிப்புகள் என்று சொல்லப்படுவன அமெரிக்காவிற்குள்ளும் செயலாக்கம் பெறுகின்றன. அமெரிக்கக் குடி மக்களை விசாரணையின்றி கால வரையற்ற இராணுவக் காவலில் வைப்பதற்கும், ஜனாதிபதி பார்த்து அவர்களை "பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்துக் குரியவர்கள்" என்று சொன்னால் அவர்களைக் கொல்வதற்குமான உரிமையை ஒபாமா நிர்வாகம் கோரியிருக்கிறது.

உள்நாட்டில் ஒற்று வேலை என்பது கூர்மையாக தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது, அத்துடன் கியூபாவில் குவாண்டானோமோ வளைகுடாவில் இருக்கும் சட்டவிரோதமான சிறை முகாம் இன்னும் இருக்கவே செய்கிறது. பொதுமக்களிடம் இருந்து எழும்சவால்கள் பொலிஸ் வன்முறை கொண்டு எதிர்கொள்ளப்பட்டதை வோல் ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்புப் போராட்டங்கள் எடுத்துக் காட்டின.


அமெரிக்காவிடம் இருந்து முடிவில்லாத "மனித உரிமை"த் தாக்குதல்களை எதிர்கொண்டு களைத்துப் போன சீனா அமெரிக்காவின் மீதான தனது சொந்த வருடாந்திர மனித உரிமை விமர்சனத்தை களமிறக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் சிறைகளில் 2.3 மில்லியன் பேர் இருப்பது, உலகில் அதிகமான விகிதத்தில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, ஒவ்வொரு நாளும் பொலிஸின் கொலைகள் மற்றும் அடக்குமுறை, மற்றும் மில்லியன் கணக்கான அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு, வீட்டு வசதி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகிய அடிப்படையான சமூக மற்றும் பொருளாதார உரிமைகளும் கூடமறுக்கப்படுதல் ஆகியவற்றை இது சுட்டிக்காட்டியுள்ளது.



"அமெரிக்கா தனது சொந்த முக்கியமான மனித உரிமைப் பிரச்சினைகளை அலட்சியம் செய்கிறது, மாறாக மற்ற நாடுகளின் பிம்பத்திற்கு அவதூறு தெளித்து தனது சொந்த மூலோபாய நலன்களை முன்னெடுக்க முனைவதற்கான ஒருஅரசியல் கருவியாக மனிதஉரிமைகளைக்கையிலெடுத்துக் கொள்ளும் பொருட்டு, மனித உரிமை

(18ஆம் பக்கம் பார்க்க)





கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் 17ஆவது ஆண்டு விளையாட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ. சிவகுமார், கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் பங்கையற்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர். வெற்றிக்கேடயம் பெற்ற ஒரு தொகுதி மாணவர்களுடன் ஆசிரியரும், முன்பள்ளி நிர்வாகியுமான சி. மகேந்திரன் பதக்கம் அணிவித்து கேடயங்களை வழங்கிய கிளிநொச்சிக் கல்விப் பணிமனை முகாமைத்துவ உதவியாளர் திருமதி புஸ்பாகரன், முன்பள்ளியின் முதன்மை ஆசிரியர் வனிதா ஆகியோர் நிற்பதைக் காணலாம். (படம் ஜெ. கலையகன்)

# சிறப்பாக அமைந்த ஆட்டம்

(தெல்லிப்பளை)

12ஆவது வீரர்களின் போரில் இரு அணிகளும் வெற்றிக்காகப் போராடினார். அந்த வகையில் இந்தப் போட்டி சிறந்த ஆட்டமாக அமைந்ததில் மகிழ்ச்சி என மகாஜனாக் கல்லூரி அணியின் பயிற்றுவிப்பாளர் இ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த வீரர்களின் போர் குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவம் கருத்துக் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் நாள் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியின் கை ஓங்கியிருந்ததை நாம் மறுக்கவில்லை. இருப்பினும் அதை சிறப்பான முறையில் எதிர்கொள்ளும் வகையில் எமது அணியின் துடுப்பாட்ட வரிசையை மாற்றியமைத்தோம். 200 ஓட்டங்களுக்கு மேல் பெறுவதே எமது இலக்காகக் கொண்டோம். அதற்கேற்ப எமது வீரர்களின் சிறப்பான ஆட்டத்திறனால் அந்த ஓட்ட எண்ணிக்கையை நாம் பெற்றோம். எதிரணியின் சிறந்த பந்து வீச்சு, களத்தடுப்பு என்பன காரணமாக அதிக நேரத்தை எடுத்துவிட்டோம்.

ஸ்கந்தாவை மதிய தேநீர் இடைவேளையின் பின்னர்தான் துடுப்பெடுத்தாடப் பணித்தோம். இதனால் போட்டி சமநிலை நோக்கிச் சென்றது. இந்தப் போட்டியில் இரண்டு அணிகளுமே அதிக திறமைகளை வெளிப்படுத்தினர். ஹட்ரிக் பெற்ற சிந்துஜனைப் பாராட்டு



கின்றேன். அதேவேளை, எமது கல்லூரி வீரர் அஜித்துக்குக் கிடைத்த ஹட்ரிக் வாய்ப்பு பிடி நழுவவிடப்பட்டதால் இழக்கப்பட்டது. அவரது முயற்சியையும் பாராட்டுகின்றேன். சிறந்த போட்டியை அளித்த இரு அணி வீரர்களையும், பாராட்டுவதோடு, அமைதியாக நடத்த உதவிய ரசிகர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன் எனவும் தெரிவித்தார். (44)


# வெற்றி தோல்வியற்ற முடிவு ஏமாற்றமே

(தெல்லிப்பளை)

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் இறுதி வரை வெற்றிக்காக எமது வீரர்கள் ஒருங்கிணைந்து முனைந்தார்கள். அந்த வகையில் அவர்கள் முயற்சி பாராட்டத்தக்கது. இருப்பினும் போட்டி வெற்றிதோல்வியற்ற நிலையில் முடிவு சற்று ஏமாற்றமே என ஸ்கந்தவரோதயாக்கல் லூரி அணியின் பயிற்றுநர் கே. கஜேந் திரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த வீரர்களின் போர் குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவம் கருத்து கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மகாஜனாக் கல்லூரி அணியை இரண்டாவது இனிங்ஸில் குறைந்தது 100 அல்லது 120 ஓட்டங்களுக்குள் வீழ்த்திவிட்டு நாம் வெற்றிபெறவேண்டும் என்றே நினைத்தோம். ஆனால், மகாஜனாக் கல்லூரி அணியின் வீரர்கள் சிறப்பாக ஆடியிருந்தனர். குறிப்பாக இரண்டாவது இனிங்ஸில் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டம் போட்டியின் போக்கை மாற்றிவிட்டது. ஆரம்பத்தில்



நிதானமாகவும் இடையில் அதிரடியாகவும் ஆடி வெற்றிக்கு நாம் முயற்சித்தோம். இறுதிப் பகுதியில் விக்கெட்டுக்கள் விரைவாகச் சரிந்ததால் போட்டியின் முடிவு சமநிலையை நோக்கியதாக இருந்தது. ஒட்டுமொத்தத்தில் எமது வீரர்கள் இப்போட்டியில் தமது திறமைகளை வெளிப்படுத்தியதில் மகிழ்ச்சி எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)

# இலக்கை அடைய முடியும்

(தெல்லிப்பளை)

எதிர்காலத்தில் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதே எனது இலக்கு. அந்த இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளதென வீரர்களின் போரில் ஹட்ரிக் சாதனை புரிந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் துணைத் தலைவர் ரி. சிந்துஜன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த வீரர்களின் போர் குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவம் கருத்துக் கேட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நான் 15 வயதின் கீழ் அணியிலிருந்தே பந்து வீச்சு மற்றும்



துடுப்பாட்டம் இரண்டிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றேன். இதனால் 15,17,19 வயதுப் பிரிவினருக்கான மாவட்ட அணியிலும், 17,19 வயதினருக்கான மாகாண அணியிலும் இடம்பெற்றேன்.

இம்முறை பந்து வீச்சிலே சாதிக்க வேண்டும் என்ற உறுதியுடனேயே களமிறங்கினேன். முதலிரண்டு பந்துகளிலும் விக்கெட்டுக்களை எடுத்த நிலையில் மூன்றாவது பந்து துடுப்பில் பட்டு விக்கெட் கீப்பரால் பிடி எடுக்கப்பட்டதால் ஹட்ரிக் கிடைத்தது. அந்த மகிழ்ச்சியுடன் போட்டியின் சிறப்பாட்டக்கரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இதன் மூலம் எதிர்காலத்திலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

12ஆவது ஆண்டாக நடைபெற்ற வீரர்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (44)

## விளையாட்டுச் செய்திகள்

# வலய மட்டத்தில் அருணோதயா சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய மட்ட ஆண்களுக்கான எல்லே போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனானது.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட வலய மட்ட ஆண்களுக்கான எல்லேப் போட்டி அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியும் மோதின.

இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியது. இருப்பினும் இறுதியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியனானது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் பண்டத்தரிப்பு ஜெசித்தா வித்தியாலய அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 11-2 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.(93)

# வலய மட்ட மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 25,26,27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக உடற்கல்விப் பணிப்பாளர் மு. நடராசா அறிவித்துள்ளார்.

இந்த மெய்வல்லுநர் போட்டிகளில் சுவட்டு நிகழ்வுகளும் மைதான நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த மூன்று தினங்களிலும் காலை 8.30 மணிக்கு வீர, வீராங்கனைகளை வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர் கேட்டுள்ளார். (06)

# துணுக்காய் கல்வி வலயத்தில் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் வலைப்பந்து வீராங்கனைகளின் திறனை அதிகரிக்கும் நோக்குடன் துணுக்காய் கல்வி வலயத்தினால் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இவ்வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்றும் நாளையும் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வலைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் முல்லைத்தீவு மாவட்ட மட்ட போட்டிக்குத் தெரிவான துணுக்காய் கல்வி வலய வலைப்பந்தாட்ட அணி வீரர்களையும், ஏனைய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீராங்கனைகளையும் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் மாலினி ஜெனிற்ரன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வதிவிட பயிற்சி முகாமாக நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமுக்கு வரும் ஆசிரியர்களையும், அணியினரையும் பொருத்தமான உடை, தங்குவதற்குத் தேவையான உபகரணங்களுடன் வருகை தருமாறும், உணவு, தேநீர் ஒழுங்கு செய்து வழங்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

# மாவட்ட மட்ட கால்பந்து

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களமும் யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலக மும் இணைந்து நடாத்தும் உதைபந்தாட்ட போட்டியின் விலகல் முறையிலான போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலகத்தை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலகம் மோதியது. 5-0 என்ற கோல் கணக்கில் உடுவில் பிரதேச செயலகம் வெற்றியீட்டியது.

கரவெட்டி அணி காரைநகர் அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. யாழ்ப் பாணம் அணி வேலணை அணியுடன் மோதியதில் பனாட்டி மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் யாழ்ப் பாணம் வெற்றியீட்டியது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் மோதியதில் 2-0 என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் வெற்றி யீட்டியுள்ளது. சங்கானைப் பிரதேச செயலகமும் மருதங்கேணி பிரதேச செயலகமும் மோதியதில் 3-0 என்ற அடிப்படையில் மருதங்கேணி வெற் றியை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டியில் புள்ளிகளின் அடிப்படையில் காலிறுதிக்கு தெரிவாகிய அணிகளில் சண்டி லிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து கோப் பாய் பிரதேச செயலகம் விளையாடியது. கோப் பாய் 2-0 என்ற அடிப்படையிலும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலகம் மோதியது. இதில் பருத்தித் துறை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதில் அரையிறுதி சுற்றுக்கு பருத்தித்துறை பிர தேச செயலகம் மற்றும் கோப்பாய் பிரதேச செய லகம் தெரிவாகியுள்ளன. (எஸ்)



படப்பிடிப்பு : சுமித்தி

## மே.தீவுகள் போராட்டம்

அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் முத லாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந் தியத்தீவுகள் அணி முதல்நாள் ஆட்டத் தில் கடுமையாகப் போராடி வருகிறது. மழை காரணமாக 73 ஓவர்கள் வீசப்பட்ட முதல் நாள் ஆட்ட முடிவில் மேற்கிந் தியத் தீவுகள் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை இழந்து துடுப்பெடுத்தாடி வருகிறது.

பார்படோஸ் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெரன் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானம் செய்தார்.

இதன்படி துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முதல் விக்கெட் 38 ஓட்டங்களுக்கு வீழ்த் தப்பட்டது. ஆரம்பத்துடுப்பாட்ட வீர ராகக் களமிறங்கிய அட்ரியன் பரத் 22 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார். இந்த விக்கெட் 18ஆவது ஓவரிலேயே வீழ்த் தப்பட்டது.

எனினும் அதன் பின்னர் இணை சேர்ந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறெய்க் ப்ரெத்வைட் மற்றும் மூன் றாமிலக்கத் துடுப்பாட்ட வீரர் கேர்க் எட்வேர்ட்ஸ் இருவரும் மிகச்சிறந்த இணைப்பாட்டமொன்றைப் பகிர்ந்தனர். இருவரும் 104 ஓட்டங்களை இரண் டாவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்தனர்.

அணி 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த கேர்க் எட்வேர்ட்ஸ் டேவிட் வோணரில் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இது டேவிட் வோணரின் முதலாவது சர்வ தேசப் போட்டி விக்கெட் ஆகும்.

அதன் பின்னத் களமிறங்கிய டெரன் பிராவோ மற்றும் கிறெய்க் ப்ரெத்வைட் இருவரும் நிதானமாக ஆட முனைந்த போதிலும் அணி 167 ஓட்டங்களைப் பெற் றிருந்த போது நிதானமாக ஆடிக் கொண்டிருந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ப்ரெத்வைட் 57 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். இவர் இந்த 57 ஓட்டங் களுக்காக 199 பந்துகளைச் சந்தித்தி ருந்தார். இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 179 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆடுகளத்தில் டெரன் பிராவோ 20 ஓட்டங்களோடும், ஷிவ்நரின் சந்தர்போல் 3 ஓட்டங்களோடும் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய வீரர்கள் சிக்கனமாகப் பந்துவீசிய போதிலும் விக்கெட்டுக்களைக் கைப்பற்றத் தடு மாறியிருந்தனர். றயன் ஹரிஸ், பீற்றர் சிடில், டேவிட் வோணர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

## ஜடேஜாவின் ஆட்டம் அபாரம்



ரவீந்திர ஜடேஜாவின் துடுப்பாட் டம் மற்றும் பந்து வீச்சு அபாரா மாக இருந்தது என்று டெக் கான் சார்ஜர்ஸ் அணி யின் அணித் தலைவர் கமரூன் ஒயிட் தெரிவித் துள்ளார்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் அணித் தலை வர் கமரூன் ஒயிட் கூறுகையில், ஜடேஜா வின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. எங்களது அணியில் இளம் வீரர்களே இடம் பெற்றிருந்தனர். ஆனால் சென்னை அணி மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது என்று கூறினார்.

வெற்றி குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி கூறுகையில், தொடக்க ஆட்டத்தில் மோச மாக விளையாடி தோற்றோம்.

இதனால் 2ஆவது ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று திட்டமிட்டு விளையாடி டெக்கான் சார்ஜர்ஸ் அணியை தோற்கடித்தோம் என்றார்.

## ராவிட்டை வோர்னோடு ஒப்பிடுவது நியாயமற்றது

ராஜஸ்தான் றொயல்ஸ் அணியின் தற்போதைய அணித் தலைவர் ராகுல் டிராவிட்டை, முன்னாள் அணித்தலைவர் ஷேன் வோர்னோடு ஒப்பிடுவது நியாயமற்றது என்று அவுஸ்ரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூரில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கில்கிறிஸ்ட் தலைமையிலான பஞ்சாப் அணி தோற்றது.

இதன்பிறகு கில்கிறிஸ்ட் கூறியது: தனது ஆட்டத் திறன் மற்றும் திட்டமிடுதலால் மற்ற வீரர்களிடம் இருந்து வேறுபட்டவர் வோர்ன், துடுப்பாட்ட வீரர்களை சமாளிக்கும் அற்புதமான ஆற்றல் பெற்றவர். அவரையும், டிராவிட்டையும் ஒப்பிடுவது தேவையற்றது. டிராவிட் மிகச்சிறந்த வீரர். உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களால் மதிக்கப்படுபவர்.

அவரது கேப்டன்ஷிப் மூலமாக ராஜஸ்தான் அணி பலனடையும். இந்த ஐ.பி.எல் போட்டியில் விளையாடும் சிறந்த அணிகளில் ராஜஸ தானும் ஒன்று. அவர்கள் வெற்றியுடன் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் தொடர்ந்து சிறப்பாக விளையாட இந்த வெற்றி அவர்களுக்கு உதவும் என்றார்.

ராஜஸ்தானுக்கு எதிராக தோற்றது குறித்துப் பேசிய அவர், மைதானத்திற்கு ஏற்றவாறு பந்துவீச்சாளர்கள் பந்துவீச தவறி விட்டனர். தோல்வி என்பது எல்லோருக்கும் ஏமாற்றமளிப்பதாகவே அமையும். அதிலும் முதல் ஆட்டத்தில் என்றால் சொல்லவே வேண்டாம். இருப்பினும் இந்தத் தோல்வியை உடனடியாக மறந்துவிட்டு சிறப்பாக ஆட முயற்சிப்போம் என்று தெரிவித்தார்.




## கடவுளால் மட்டுமே 100 சதம் அடிக்க முடியும்

கடவுளால் மட்டுமே 100 சதம் அடித்து சச்சினின் சாதனையை முறிய டிக்க முடியும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் வீரேந்திர ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத் திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண் டுல்கர் கடந்த மாதம் ஆசியக் கிண்ணப் போட்டியில் தனது 100ஆவது சதத்தை நிறைவு செய்தார்.

அதன் பிறகு பலதரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள் ளன. சச்சின் ஒரு பேட்டியில் தனது சாதனை முறியடிக்கக் கூடியது தான் என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து வீரேந்திர ஷேவாக் கூறுகையில், சச்சினின் 100 சத சாத னையை நினைக்கும்போது கடவுளால் மட்டுமே இப்படி ஒரு சாதனை படைக்க முடியும் என்று மட்டும்தான் என்னால் சொல்ல முடியும்.

மேலும், இந்த சீசனில் யார் சாம் பியன் என்று கேட்டால் எனது பதில், டெல்லி டேர்டெவில்ஸ், என்பது மட் டுமே என்றார்.

இந்திய அணியின் இளம் அதிரடி வீரர் ஹோலி கூறுகையில், சச்சினின் 100ஆவது சத சாதனைக்கு அருகில் கூட யாராலும் நெருங்க முடியாது என்று கூறினார்.

## கொல்கத்தா தோல்வி

(கொல்கத்தா)

கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல் அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரின் ஆட்டம் ஒன்று நேற்று கொல்கத்தா அணிக்கும், ராஜஸ்தான் றோயல் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முதலில் ஆடிய ராஜஸ்தான் றோயல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய கொல்காத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வி யைத் தழுவியது.

## டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற ஆசை

(கொழும்பு)

இலங்கை அணி சார்பாக டெஸ்ட் போட்டி களில் பங்குபற்றுவது தனது ஆவல் என இலங்கை அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் சாமர கப்புகெதர தெரிவித துள்ளார். அனைத்து கிரிக்கெட் வீரர் களின் கனவைப் போலவும், தனது கனவும் அதுவே என அவர் தெரிவித் துள்ளார். தான் இதுவரை பங்குபற்றிய டெஸ்ட் போட்டிகளில் 35 இற்கு அண் மித்த சிறந்த சராசரியைக் கொண்டிருப் பதையும் ஞாபகமூட்ட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அக்குற்றச்சாட்டுக்களை ஓரளவு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். எனினும் தனது பக்க நியாயமாக தான் சில சிறந்த பெறுபேறுகளையும் வெளிப்படுத்தியுள்ளதாகவும், எனினும் குறைவான பெறுபேறுகளில் அவை மறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு விமர்சனங்கள் மீது தனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது எனத் தெரிவித்துள்ள அவர், விமர்சனங்கள் கிரிக்கெட்டை வளப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

இலக்கம் நான்கு அல்லது ஐந்தில் துடுப்பெடுத்தாட விரும்புவதாகத் தெரி வித்துள்ள கப்புகெதர, எனினும் அணி யின் தேவைக்கு ஏற்றவாறு எந்த இடத் திலும் தன்னை மாற்றிக்கொள்ள விரும் புவதாகவும் தெரிவித்தார். அத்தோடு பாடசாலைக் காலத்தில் ஆரம்பத்துடுப் பாட்ட வீரராகவும் விளையாடியுள்ள நிலையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ருவென்ரி 20 போட்டிகளில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கும் எண்ணமும் தனது மனதில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனது பக்கம் வயது உள்ளதன் காரண மாக எதிர்காலம் தொடர்பாக நம்பிக்கை யுடன் காணப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், தொடர்ந்தும் கடுமையாக பயிற்சி களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள் ளார். அண்மையில் நிறைவடைந்த பிறீமியர் கழகங்களுக்கிடையிலான ருவென்ரி 20 தொடரில் சிறப்பாக ஆடிய கப்புகெதர, பெறுபேறுகளை வைத்துக் கொண்டு அணியில் இடம் தேட முடியாது எனவும், தொடர்ந்தும் கடுமையாக உழைக்க வேண்டியிருப் பதாகவும் தெரிவித்தார்.

# மீண்டும் தமிழ் மக்களைப் பேரழிவுக்குள் தள்ளும் அரசியல்!

- சிவா சுப்பிரமணியம் கட்டுரையிலிருந்து.

ஜெனிவாவில் மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை நிறைவேறியிருப்பது தொடர்பாகத் தமிழ் மக்களிடம் அதீத நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் முயற்சியில் தமிழ்த் தலைவர்கள் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இப் பிரேரணை தமிழ் மக்களின் உரிமைகளை வெல்வதற்கான முதல்படி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டது.

மற்றும் எல்லோரினதும் கருத்துகளின் சாராம்சமாக இருப்பது ஜெனிவாப் பிரேரணை இனப் பிரச்சினையின் தீர்வை மிகவும் இலகுவாக்கி விட்டது என்பதாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் இந்த நம்பிக்கை வளர வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தமிழ்த் தலைவர்கள் கடந்த காலங்களிலும் இவ்வாறான நம்பிக்கைக்களைத தோற்றுவித்து அவற்றின் மூலம் தங்கள் அரசியல் இருப்பை உறுதிப் படுத்திக் கொண்டார்கள். ஆரம்பத்தில் சமஷ்டி என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தார்கள்.

தமிழர்களுக்கு மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கும் தனியான சமஷ்டி அலகு என்று கூறினார்களேயொழிய அந்தச் சமஷ்டி எந்த வகையானது என்பது பற்றியோ மத்திக்கும் சமஷ்டி அலகுக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு எவ்வாறானதாக அமையும் என்பது பற்றியோ கடைசி வரை தெளிவான விளக்கத்தை அவர்கள் அளிக்கவில்லை.

பின்னர் தனிநாடு பற்றிய நம்பிக்கையைத் தமிழ் மக்களிடம் தோற்றுவித்தார்கள். அதன் படுமோசமான விளைவை நாம் பார்த்து விட்டோம்.

ஆரம்பத்திலிருந்தே சர்வதேசம் பற்றிய நம்பிக்கையையும் வளர்த்து வந்தார்கள். இப்போது அந்த நம்பிக்கையை வலுவாக வளர்க்கின்றார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகளை வெல்வதற்கான முயற்சிக்கும் ஜெனிவாப் பிரேரணைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றே கூற வேண்டும். இப் பிரேரணை இரண்டு விடயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றது. இலங்கை அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பது ஒன்று, மற்றது போர்க்குற்ற விசாரணை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் சில உடனடிப் பிரச்சினைகளுக்கான தற்காலிகத் தீர்வாகவே அமைகின்றன. அவை இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வல்ல. போர்க்குற்ற விசாரணை மூலம் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படலாம். தண்டிக்கப்படாமலும் போகலாம். அவ்விசாரணை அரசியல் தீர்வுடன் சம்பந்தப்பட்டதல்ல.

உண்மைநிலை இவ்வாறிருக்க ஜெனிவாப் பிரேரணையின் மூலம் தமிழ் மக்களின் விடிவுக்கு வழிபிறந்திருக்கின்றது எனக்கூற முற்படுவது இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு புறம்பான இலக்கைக் கொண்ட செயற்பாடு என்றுதான் கூற வேண்டும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான சமகால யதார்த்தம் இந்த நிலைப்பாட்டிலும் பார்க்க முற்றிலும் வேறானது. பதின்மூன்றாவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. அதற்கு மேலான எந்தத் தீர்வும் அரசியலமைப்புத் திருத்தத்துக் கூடாகவே நடைமுறைக்கு வரமுடியும்.

அத்திருத்தம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதோடு சர்வசன வாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரத்தையும் பெற வேண்டும் என்பது அரசியலமைப்பின் ஏற்பாடு. கணிசமான சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் சர்வசன வாக்கெடுப்பில் வெற்றியீட்டுவது சாத்தியமில்லை. படிப்படியான அரசியல் தீர்வாக இருந்தாலென்ன முழுமையான அரசியல் தீர்வாக இருந்தாலென்ன இதுதான் யதார்த்தம்.




எனவே அரசியல் தீர்வைப் பொறுத்த வரையில் இறுதி அங்கீகாரம் சிங்கள மக்களே. இந்த யதார்த்தத்தை தமிழ்த் தலைவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களைப் போக்கி அவர்களை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டத்திலும் பார்க்க அரசாங்கத்துடன் கூடிப் பேசிக் கலைவது முக்கியமானது என இவர்கள் கருதுகின்றார்கள். அரசாங்கத்துடன் பேசுவது தவறல்ல, அரசாங்கத்துடனான பேச்சுடன் நிறுத்திக் கொள்வதே தவறு. எந்த அரசாங்கமும் அதன் வாக்கு வங்கியை மையமாக வைத்தே முடிவுகளை எடுக்கும் என்பதால் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒரு வரையறைக்குள்ளேயே அதன் செயற்பாடு அமைய முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் அரசியல தீர்வுக்கு கணிசமான ஆதரவு கிடைக்கக்கூடிய சூழ்நிலை தோன்றக்கூடியதாக இருக்குமானால் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைக்குச் சமகாலத்தில் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வது தான் அரசியல் தீர்வு காண்பதற்கான ஆக்கபூர்வ அணுகுமுறை.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் முடிவு ஏதாவது எட்டப்பட்டாலும் அது சர்வசன வாக்கெடுப்பில் நிராகரிக்கப்படுமேயானால் அதனால் எவ்வித பலனும் இல்லாது போய் விடும். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையுடன் தங்கள் பொறுப்பை மட்டுப்படுத்தும் வகையில், தமிழ்த் தலைவர்கள் செயற்படுவதைப் பார்க்கும் போது இவர்கள் அரசியல் தீர்வில் அக்கறை இல்லாமல் யாரையோ திருப்திப்படுத்துவதற்காகவே அரசாங்கத்துடன் பேசுகின்றார்கள் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது. அடிக்கடி சர்வதேசம் பற்றிக் கூறுவது இதை உறுதிப்படுத்துகின்றது.

சர்வதேசம் என்ற வரையறைக்குள் தமிழ்த் தலைவர்கள் உள்ளடக்கும் நாடுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் முழுமையான அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்ளாதது மாத்திரமன்றி அதற்கு ஆதரவான கருத்தையும் தெரிவிக்கவில்லை. இந்த நாடுகளின் சிபார்சுகள் பதின்மூன்றாவது திருத்தத்தை அடியொற்றியதாகவே உள்ளன.

இந்த நிலையில் அரசியல் தீர்வுக்குச் சர்வதேசத்தை நாடுவது பலனற்ற முயற்சி. சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் சர்வதேசத்தின் உதவியை நாடுவது தாம் விரும்பும் தீர்வைச் சர்வதேசத்தின் மூலம் வலிந்து திணிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகவே அமையும். இந்தத் தீர்வு நிச்சயமாக அரசியல் தீர்வாக இருக்க முடியாது. இத் தலைவர்கள் தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடவில்லை என்பதே இதன் அர்த்தம்.

ஆயுதப் போராட்டமோ தனிநாடோ சாத்தியமில்லை என்பது அண்மைக்கால சோக வரலாறு கற்றுத்தந்த பாடம். மீண்டும் அந்தப் பிழையான கொள்கை வழியில் சென்று தமிழ் மக்களைப் பேரழிவுக்குள் தள்ளும் வகையில் செயற்படாமல் சாத்தியமான வழியில் அரசியல் தீர்வை அடைவதற்கு மக்களை வழிநடத்தக் கூடிய தலைமையே இன்றைய தேவை.

## தலைசுற்றல் ஏற்படுத்துவது எது?



வட்டமாக மிக வேகமாகச் சுற்றுபவன் திடீரென நின்றால் பொதுவாகத் தலைசுற்றி மயக்கம் ஏற்படும். சமச்சீரைக் கட்டுப்படுத்தும் காதின் உட்பகுதியிலுள்ள உணர்ச்சி நீர்மம் (Sensitive liquid) உடல் சுற்றுவது நின்ற பிறகும் தொடர்ந்து சுற்றிக்கொண்டுள்ளது. ஆகையால் சுற்றுப்புறப் பொருள்கள் இன்னும் சுற்றிக் கொண்டிருப்பதாக அல்லது ஓடிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றன. ஆயினும் சில விநாடிகளுக்குள் அந்த நீர்ம நெகிழ்பொருள் சமன் அடைந்து சரியாகி விடுகிறது. இந்த உணர்ச்சி கிறுகிறுப்பு (Vertigo) எனவும் அழைக்கப்படும். உயரத்திலிருந்து கொண்டு கீழே பார்ப்பவனுக்கும், கப்பலில் போகின்ற போது பார்ப்பவனுக்கும் இக்கிறுகிறுப்பு ஏற்படக்கூடும். உட்காதின் நெகிழ் நீர்மத்தின் காரணத்தால் ஏற்பட்ட நரம்பின் விளைவே இது அல்லாமல் பெரும்பாலும் உடல்சார்ந்த தன்மை இதில் இல்லை எனக் கூறலாம். உடலின் எட்டாவது கபால நரம்பின் ஒரு கிளையான வெஸ்டிபுல நரம்பின் பாதிப்பிலும் தலைசுற்றல் ஏற்படும்.

## என்சைக்ளோபீடியாவின் முடிவு




என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுப்பு வருடா வருடம் அச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது. பணமுள்ளவர்கள் வீட்டு அலுமாரிகளில் தூங்கும். இதை அவ்வப்போது தகவல் தேட உதவும் புத்தகம் என்றுதான் கருதுவதால் இதை முழுக்கப் படிக்கத் தேவை இல்லை என்று வைத்து விடுவார்கள். ஆனால் அனேகமாக. எப்போதுமே தொடாமலே புத்தகங்கள் சும்மா கிடக்கும். மரங்களை வெட்டி காகிதமாக்கி அடுக்கி வைத்திருப்பதை வேண்டுமானால் குற்றம் என்று கருதலாம்.


ஆனால் எத்தனையோ குப்பைகள் நாட்டில் அச்சிடப்படுகின்றன. நம் ஊரிலேயே எத்தனை "பரபரப்பு" பத்திரிகைகள், தினம் ஒரு ஆபத்து தமிழருக்கு என்று பீதியை வளர்ப்பதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கும் குப்பைகள் இலட்சக்கணக்கில் அச்சாகின்றன. ஒப்பீட்டளவில் என்சைக்ளோபீடியா அத்தனை மோசமில்லை.

என்ன ஒரு பிரச்சினை என்றால், உலக மையமே பிரிட்டன் என்பது போன்ற, பிபிசி போன்ற செய்தி ஸ்தாபனங்களின் மமதை பிடித்த பார்வை இந்த புத்தகத் தொகுப்புக்கும் இருந்தது. இந்த புத்தகத்தை இனிமேல் அச்சிடப் போவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். மரங்கள் கொஞ்சம் பிழைக்கும்.

ஒரு காரணம் விக்கி பீடியா போன்ற வலை ஊடகங்கள் வந்த பிறகு இதை யாரும் வாங்குவதில்லை. இன்னொன்று வலையில் தேடினால் கிட்டாத எதுவும் இந்தப் புத்தகங்களில் இராது என்பது பொதுமக்கள் கருத்து. பல பத்தாண்டுகளுக்கு இப்புத்தகங்கள் உலகின் மூலை முடுக்கில் எல்லாம் ஏதோ ஒரு உலகம் பூரா கிட்டும் தகவல்களுக்குப் பாதையாக இருந்தன என்பதை நாம் மறுக்க முடியாது.

# பெண்களின் வாழ்க்கையில் விளையாடும் சீதனம்

- கார்த்தி -



பெண் பிள்ளைகளை கரைசேர்க்க வேண்டுமே என்ற ஏக்கமும் கவலையும் தற்போது பெற்றோரைப் பாடாய்ப் படுத்துகின்றது. பாவம் இந்த அப்பாக்கள் உண்ணாமல் உறங்காமல் சொத்துச் சேர்த்து ஓடாய்த் தேயவேண்டியுள்ளது.

திருமணப்பேச்சு ஆரவாரமாக ஆரம்பித்துவிட, பெண்களின் முகம் வெட்கத்தால் சிவந்துவிடும் எனக் கூறுவார்கள் ஆனால் இப்போது வாடி வதங்கிவிடுகின்றது. பெண் அறிவானவளா? அடக்கமானவளா? எனக் கேட்கும் காலம் மலையேறிப்போய் சீதனம் கொண்டு வருவாளா? எனக் கேட்கும் காலமே இது. சீர்வரிசையை அள்ளி வைத்தால்தான் பெண்ணுக்கு பூமாலை தோளில் ஏறும்.

அந்தவகையில் தற்போது யாழ்ப்பாணத்தில் சீதனம் ஒரு பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாண மக்களுடைய வாழ்க்கை இன்றும் பொருளாதார ரீதியில் நிலையாக இருப்பதற்கு சீதனமும் ஒரு வகையில் காரணமாக இருக்கலாம், சீதனம் கொடுக்கவேண்டும் என்பதால்தான் சொத்துக்களைப் பாதுகாக்கவும் மேலதிகமாகச் சொத்துக்களைத் தேடவும் பழக்கப்பட்டிருக்கின்றனர். இருப்பினும் பல பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக மாறுவதற்கு சீதனம் ஒரு காரணம் என்றால் அது பிரச்சினையாகத்தான் பார்க்கப்படும்.

அரசாங்க வேலை பார்க்கும் மாப்பிள்ளை என்றால் அவருக்கு ஒரு தொகை, வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் அவருக்கு ஒரு சீதனம், கூலி வேலை செய்பவர் என்றால் அவருக்கு ஒரு சீதனம் என தரகர் கையில் ஒரு பெரிய பட்டியலே இருக்கும்.

“மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் சீதனத்தை கொடுக்க முடியாததால் 34 வயதாகியும் என் மகள் இன்னும் திருமணம் ஆகாமல் இருப்பது என் மனசுக்கு சரியான வேதனையா இருக்கு” என புலம்பும் இந்த தாய்க்கு உண்மையிலேயே பெரிய மனசுதான்,

இவருக்கு நான்கு ஆண்பிள்ளைகள் நான்கு பெண்பிள்ளைகள். இவருடைய மூத்த மகனிற்கு சீதனம் இன்றி திருமணம் செய்து வைத்தவர் தனது இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் சீதனம் கொடுத்து மணமுடித்து வைத்தார். கஷ்டத்தின் மத்தியிலும் ஏனைய மகன்களுக்கும் சீதனம் வாங்குவதில்லை என்ற உறுதியான எண்ணத்துடன் இருக்கும் இவரது மூன்றாவது மகளுக்கு சீதனம் கொடுக்க முடியாததால் அவரின் வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கின்றது.

இவர் உதாரணத்திற்கு ஒருவர் மட்டுமே, இவ்வாறு பல பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பெண்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறதே என்பதைச் சிந்திக்காமல் சீதனம் வாங்குவதும் கொடுப்பதும் கலாசாரம் என நமது சமூகம் தவறான எண்ணத்தை வளர்த்துள்ளது.

மாப்பிள்ளை பெயரைச் சொல்லி அவரின் தாய்தான் சீதனம் கேட்பதாக பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இத்தனை வருடம் தன்னை வளர்த்துப் படிக்கவைச்ச பெற்றோர் மற்றும் உடன் பிறப்புகளின் வாழ்க்கைக்காக சீதனம் வாங்குவதாக சில ஆண்கள் கூறுகின்றனர். அப்படியாயின் பெண்களுக்கு அப்படியான பொறுப்புக்கள் இல்லையா?

மகனுக்கு அதிகமா சீதனம் வாங்கினால்தான் மதிப்பு என்று பலரும், பெண்ணுக்கு நிறைய சீதனம் கொடுத்தால்தான் மாப்பிள்ளை வீட்டில் கௌரவம் என்று சில பெற்றோரும் நினைக்கின்றனர். அதனால் வீடு, நிலம், கார், இலட்சக்கணக்கில் பணம் என மாப்பிள்ளை வீட்டார் வாயில் வந்தவற்றை கேட்கின்றனர். இருப்பவர்கள் கொடுக்கின்றனர். இல்லாதவர்கள் என்ன செய்வது?

மனைவி கொண்டுவரும் சொத்துக்களை எதிர்பார்த்து வாழ்பவர்கள் என்று ஒட்டுமொத்த ஆண்களையும் சொல்லிவிட முடியாது. தனது மனைவியையே பெரிய சொத்தாக நினைக்கும் ஆண்களும் உண்டு. வாழ்க்கையில் எங்களால் உழைக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலே போதும். பணமா! சொத்தா! கையில் வந்துவிடும். எங்கள் மீது அன்புள்ள, அக்கறையுள்ள, நம்பிக்கையுள்ள, உறவு கிடைப்பதுதான் கஷ்டம். பணத்தை சம்பாதிக்கலாம் பாசத்தை சம்பாதிப்பது இலகுவானதல்ல.


இந்தியாவைப் பொறுத்தவரையில் பெண்பிள்ளைகள் பிறப்பதையே சாபமாக கருதுகின்றனர். இதனால் தான் இன்றும அங்கு கிராமப்புறங்களில் பெண பிள்ளைகள் பிறந்தவுடன் கள்ளிப்பால் கொடுத்து கொலைசெய்கின்ற நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏறுவது போல சீதனத்தின் தொகையும் கூடிக் கொண்டே செல்வதால் இங்கும் கள்ளிப்பால் கொடுக்கும் நிலை உருவாகாலம்.

இப்போதே சமூகம் விழிப்படைந்து கொண்டால்தான் அந்த இழிநிலையிலிருந்து தப்பிக்கலாம்.

---

## சினிமா சினிமா


❑ **ப**ல விருதுகளை வென்ற “மைனா” பட இயக்குநர் பிரபு சாலமன் இயக்கும் புதிய படம் “கும்கி”. காட்டுக்குள் இருந்து வெளியேறும் அல்லது வழி தெரியாமல் தடுமாறும் யானைகளை வழி நடத்திச்சென்று காட்டுக்குள் விடுவதற்கு பயிற்சி பெற்ற யானைகளை கும்கி யானை என்று அழைப்பார்கள். யானைகளின் வாழ்க்கை பற்றியும், கும்கி யானைகளின் பின்னணியில் ஒரு காதல் கதையையும் சொல்லியிருக்கிறேன் என்கிறார் பிரபுசாலமன். இசையமைத்திருப்பவர் டி.இமான். பாடல்கள் யுகபாரதி. தயாரிப்பவர் மற்றொரு இயக்குநரான லிங்குசாமி. நடிகர் பிரபுவின் மகன் விக்ரம் பிரபுவும், புதிய நடிகை லக்ஷ்மி மேனன் என்பவரும் நடிக்கின்றனர்.




❑ **ஜெ**யமோகன் இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்து எழுதிய உலோகம் நாவல் திரைப்படமாக உள்ளது. திருடா திருடி, யோகி, சீடன் ஆகிய படங்களை இயக்கிய சுப்ரமணிய சிவா இப்படத்தை இயக்கி நடிக்க உள்ளார். இது படத்தின் நாயகனை முக்கியமாக வைத்து உருவாகியுள்ள கதை. அதனால்தான், நானே இப்படத்தில் நடிப்பது என்று முடிவெடுத்தேன். முழுக்க முழுக்க ஆக்ஷன் படமாகும் இது. ஆனால் யதார்த்தத்தை மிஞ்சும் வகையில் எதுவும் இருக்காது. ஏப்ரல் மாதம் இப்படத்திற்கான படப்பிடிப்புகள் துவங்கி விரைவில் திரைக்கு வரும் என்று கூறியுள்ளார் சுப்ரமணிய சிவா.



ஜெயமோகன்



❑ **த**னுஷ் - பார்வதி மேனன் ஜோடியாக நடிக்கும் படத்தை புதிய இயக்குநர் பாரத் பாலா இயக்க உள்ளார். ஸ்ரீகாந்த் நடித்து சசி இயக்கத்தில் வெளியான பூ படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து தேசிய விருது பெற்ற நடிகைதான் பார்வதி மேனன். 1997ஆம் ஆண்டு இந்தியாவின் 50ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில் ஏ.ஆர். ரஹ்மான் பாடி வெளியான வந்தேமாதரம் பாடலை இயக்கியவர் பாரத் பாலா. கதாநாயகி பற்றி தனுஷிடம் கேட்டதற்கு, இயக்குநரின் தெரிவில், தான் தலையிடுவதில்லை என்கிறார் பவ்யமாக.



❑ **ந**டிகர் அஜ்மல் வில்லனாக நடித்துள்ள ரகளை படம் வெளியாகிவிட்டது. தமிழ், தெலுங்கு என ஒரே நேரத்தில் தயாரான இப்படத்தில் ராம் சரண் கதாநாயகனாக நடித்துள்ளார்.

மிஸ்கினின் அஞ்சாதே படம் மூலம் அறிமுகமான அஜ்மல், திருதிரு துருதுரு, டிஎன் 07 எல் 4777 படங்களுக்குப் பிறகு கோ படத்தின் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தார். தற்போது வெற்றிச் செல்வன் மற்றும் கருப்பம்பட்டி படங்களிலும் நடித்து வரும் அஜ்மல், மருத்துவம் படித்து டாக்டரானவர். ஆனால் சினிமா மீதான ஆர்வத்தில் இப்போது வில்லனாகியுள்ளார்.



---

## அரசனின் தீர்ப்பு!

அரசன் ஒருவன் சிறைச்சாலையைப் பார்வையிட வந்தான். அங்கிருந்த கைதிகளில் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் சிறைக்கு வந்ததற்கான காரணத்தைக் கேட்டான்.

முதல் கைதி, “அரசே! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னைத் தவறுதலாகச் சிறையில் அடைத்து விட்டனர். தாங்கள்தான் அருள்கூர்ந்து என்னை விடுவிக்க வேண்டும்” என்றான்.

அடுத்த கைதி, “அரசே! எனக்கும் நீதிபதிக்கும் தகராறு. அதனால் அவர் எனக்குச் சிறைத் தண்டனை அளித்து விட்டார். நான் எந்தப் பாவமும் அறியாதவன்” என்றான்.

இப்படியே ஒவ்வொரு கைதியும் தாங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும் நல்லவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அரசனும் பொறுமையாக அனைவரது முறையீட்டையும் கேட்டுக் கொண்டே வந்தான்.

கடைசியாக ஒரு கைதி மட்டும், “அரசே! இந்தக் கைகளால் நான் திருடினேன். அதற்காகத்தான் நான் சிறைத் தண்டனை அனுபவிக்கிறேன்.” என்றான்.



இதைக் கேட்டதும் அரசன் கடுங்கோபம் கொண்டான்.

அவன் சிறைக் காவலர்களைப் பார்த்து, “நல்லவர்கள் மட்டும் இருக்கக் கூடிய இந்தச் சிறைச்சாலையில் இந்தத் திருடனைக் கொண்டு வந்து சேர்த்தது யார்? இவன் இங்கிருந்தால் இங்கிருக்கும் அனைவரையும் திருடர்களாக்கி விடுவான். இவனை உடனே வெளியே விரட்டி விடுங்கள்” என்று கத்தினான்.

அரசனின் குறிப்பை உணர்ந்த காவலர்கள் உண்மையைச் சொன்ன அந்தக் கைதியை மட்டும் விடுவித்தனர்.

# எமக்கும் உரிமை உண்டு ; ஐ.நா. குறித்து பேசுவோம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பு குறித்து கருத்து வெளியிடும் உரிமை எமக்கும் உள்ளது என அந்த அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பது அந்நிய அமைப்பு அல்ல. சிலர் அதனை அந்நியமாக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் நாமும் உறுப்புரிமை வகிக்கின்றோம். எமது பக்க நிலைப்பாடுகளை வெளியிடக் கூடிய உரிமை உள்ளது என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.


இலங்கையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினர் பயிற்சி நிகழ்வில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் ஏனைய அமைதிகாக்கும் படையினரை விடவும் இலங்கைப் படையினர் சிறந்த முறையில் கடமையாற்றி வருகின்றனர்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போரில் வெற்றியீட்டினோம். ஆனால், வெளிநாடுகளின் வழிகாட்டல்களுக்கு அமைய போர் முன்னெடுக்கப் படவில்லை.

உள்நாட்டில் எமக்கே உரிய முறையில் போர் வியூகங்கள் வகுக்கப்பட்டன என சவேந்திர சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# மெனிக்பாம் முகாமில் தங்க நகை கொள்ளை



(வவுனியா)

செட்டிகுளம் இலக்கம் 3 - மெனிக்பாம் முகாமில் உள்ள வீடொன்றில் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் இருந்து 1 84 000 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களும் 2000 ரூபா பணமும் நேற்று இரவு 7 மணியளவில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இது குறித்து செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அப்பிரதேசத்தில் உள்ள பெண் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இவரிடம் இருந்து களவாடப்பட்ட பொருட்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேக நபரான பெண் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கிபுலாவெல பிரதேசத்திலுள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

# அப்பாவிகளின் உழைப்பில் அரச நிர்வாகம்



(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுச் செல்லும் அப்பாவி இலங்கை பணியாளர்களின் கடும் உழைப்பில் பெறும் நிதியின் மூலம் அரசாங்கம் தனது நிர்வாகத்தை மேற்கொள்வதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பஹலகொஸ்கம பிரதேசத்தில் இருந்து சவூதி அரேபியா சென்ற நிலையில், மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமான பெண்ணின் உறவினர்களை சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அரசாங்கம், வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் செல்லும் பொதுமக்கள் தொடர்பில், அவதானம் செலுத்துவதில்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

# கர்ப்பிணித் தாய்மாருக்கு புத்தாண்டு அன்பளிப்பு

(தெல்லிப்பளை)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கர்ப்பிணித் தாய்மாருக்கு விசேட அன்பளிப்புப் பொருட்களை வழங்குவதற்கு தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்றைய தினம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் கர்ப்பிணித்தாய்மாருக்கு மேற்படி விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படவுள்ளது.

காலை 9.00 மணிக்கு இடம்பெறவிருக்கும் இந்த வைபவத்தில் கர்ப்பிணித் தாய்மார் விஷேடமாக கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இடையூறு செய்ததால் அனுமதிப்பத்திரம் ரத்து

(கொழும்பு)

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட 10 சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான அனுமதி பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரோஷன் குணவர்தன கூறியுள்ளார்.

இதேவேளை பஸ் ஊழியர்களின் நடவடிக்கைகள் குறித்து மாதமொன்றுக்கு சுமார் 50 முறைப்பாடுகள் தமக்கு கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்படி மிகுதி பணம் வழங்காமை மற்றும் பயணிகளுடன் தகாத முறையில் உரையாடுதல் போன்ற முறைப்பாடுகளும் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிஸ் நிலையங்கள் மீது நள்ளிரவு வேளை சோதனை

பொலிஸ் நிலையங்களை இரவு வேளைகளில் சோதனையிடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர் பொலிஸ் நிலையங்கள் பகல் வேளைகளிலேயே சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இரவு வேளைகளில் பொலிஸ் நிலையங்களை சோதனையிடுவதன் மூலம் அங்கு இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றை உறுதி செய்து கொள்ள முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் முதற்கட்டம் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்படுவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரது ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிடுறகிறார்.

# விரைவில் இயங்கும்

(கொழும்பு)

முல்லைத்தீவு - கருணாட்டுக் கேணி பிரதேசத்தில் பாடசாலை உட்பட பொதுக் கட்டடங்களை விரைவில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருடங்களாக இந்தக் காணி படையினர் வசமிருந்ததாகவும் அங்கி ருந்த படைத்தரப்பினர் வேறொரு பகுதிக்கு நகர்ந்துள்ளதாவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் ஏற்கனவே இருந்த பாடசாலை உட்பட பொதுக் கட்டடங்கள். மீண்டும் இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக தகவலகள் தெரிவிக்கின்றன.

பிரதேசத்தில் பொது நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிககைகளை கருத்திற் கொண்டு புனரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

# என்னை நம்புங்கள்



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி குறித்து தான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் கட்சிக்கு தன்மீது நம்பிக்கை இல்லாவிட்டால் ஒரு நொடிப்பொழுதேனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்க தான் விரும்பவில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று களனிப் பகுதியில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பிரதேச செயலகங்கள் ஊடாகவே ஓய்வூதியம்

## கிளிநொச்சியில் புதிய நடைமுறை

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம எதிர்வரும் மேமாதம் தொடககம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவரை காலமும் மாவட்ட அரச ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத்தை வழங்கும் வேலைகளை கிளிநொச்சி மாவட்ட செயலகமே மேற்கொண்டு வந்தது.

எதிர்வரும் மாதம் தொடக்கம் பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பிரதேச செலகங்கள் ஊடாக இலத்திரனியல் முறையிலான ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பகுதியில் 554 அரச ஓய்வூதியர்களும், பச்சிலைப்பள்ளிப் பகுதியில் 43 ஓய்வூதியர்களும், பூநகரிப்பகுதியில் 54 ஓய்வூதியர்களும், கண்டாவளைப் பகுதியில் 89 ஓய்வூதியர்களும் அரச ஓய்வூதியம் பெற்று வருவதாக மாவட்ட செயலக கணக்காளர் தெரிவித்தார். (112)

# ஆதவன் முன்பள்ளி மழலைகளுக்கு 'இசுறு உதான' வங்கிக் கணக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியில் கல்வி பயிலும் 268 மழலைகளுக்கு கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையினால், 'இசுறு உதான' சேமிப்புக் கணக்கு இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தலா 100 ரூபா வீதம் வைப்பிலிட்டு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சேமிப்புப் புத்தகங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்ற விளையாட்டு விழா நிகழ்வில் முன்பள்ளியின் முதன்மை ஆசிரியர்களான பூமா மற்றும் வனிதா ஆகியோரிடம் மக்கள் வங்கி அலுவலர் கௌரிதரன் கையளித்தார்.



**நாடக நிகழ்வுக்காக விற்கப்பட்ட நுழைவுச் சீட்டு தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

| வகுப்பு | நுழைவுச் சீட்டு விலை |
|---|---|
| விசேட வகுப்பு | ரூ. 200.00 |
| முதலாம் வகுப்பு | ரூ. 100.00 |
| இரண்டாம் வகுப்பு | ரூ. 50.00 |
| மூன்றாம் வகுப்பு | ரூ. 30.00 |

38. விசேட வகுப்புச் சீட்டுக்கள் 150 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..................................................................

39. முதலாம் வகுப்புச் சீட்டுக்கள் 100 விற்றிருப்பின் கிடைத்த இலாபம் எவ்வளவு?

..................................................................

40. 2ஆம் வகுப்புச் சீட்டுக்கள் 200 விற்றிருப்பின் கிடைத்த பணம் எவ்வளவு?

..................................................................

41. 3ஆம் வகுப்பு சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

..................................................................


42. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க.

..................................................................


43. மொத்தமாக விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?


..................................................................

**பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1) 

2) 

3) 

4) 

.......................... .......................... .......................... ..........................

**பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

44. வாழை + மரம் :..............................
45. பொன் + தாலி :..............................
46. மரம் + வேர் :..............................
47. மண் + குடிசை :..............................

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

48. செந்தாமரை :..............................
49. நீர்க்குடம் :..............................
50. பூஞ்சோலை :..............................
51. பாற்குடம் :..............................

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

52. பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது.
   1. சாரதி - பயணிகள் - பிச்சைக்காரர்கள்
   2. நடத்துநர் - சாரதி - இசை
   3. ஆசனங்கள் - சாரதி - நடத்துநர்

53. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
   1. கப்பல், பயணிகள், பிச்சைக்காரர்
   2. மீன், மீனவர்கள், கரை
   3. நீர், அலை, மீன்

54. பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A -நித்திரைவிட்டு எழுதல் B -.................................... C-....................................
D-.................................... E - வீட்டிலிருந்து புறப்படுதல்

| 1. | 2. | 3. |
|---|---|---|
| A - உடை அணிதல் | A - உணவு உண்ணல் | A - முகம் கழுவுதல் |
| B - முகம் கழுவுதல் | B- முகம் கழுவுதல் | B - உடை அணிதல் |
| C - உணவு உண்ணல் | C - உடை அணிதல் | C - உணவு உண்ணல் |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 51



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்க.**



01) கீழே தரப்பட்டுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விளையாட்டு எது?
இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வெளியக விளையாட்டு, ஓர் அணியில் 11 வீரர்கள் விளையாடுவர். இலங்கையில் மிகப் பிரபல்யமான விளையாட்டு.


(1)


(2)


(3)

02. தரப்பட்டுள்ள விலங்குகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன,

A 
B 
C 
D 

1. AB உம் CD உம் 2. AD உம் BC உம் 3. AC உம் BD உம்

03. எனது வயது 36. எனது அம்மாவின் வயது, எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவானதாகுமெனின், நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
   1. 30 2. 34 3. 36

**பின்வரும் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

04. 1) வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
   2) அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்.
   3) புடோலங்காய் ஒருவகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.

05. 1) நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
   2) காகம் ஒரு பறவை. அது தாவர உண்ணி.
   3) மனிதன் இரண்டு கால் விலங்கு. அவன் முலையூட்டி வகைக்குரியவன்.

06. வீடொன்றில் உள்ள நீர்த்தொட்டியின் கொள்ளளவு 6500 லீற்றர் ஆகும். இந்நீரானது 5 பேர்கள் அடங்கிய குடும்பமொன்றின் 5 நாள் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இத் தொட்டியின் 1/5 பங்கு நீரானது இக்குடும்பத்தின் எத்தனை நாள் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.
   1. 25 நாட்கள் 2. 1 நாள் 3. 5 நாட்கள்

**தரப்பட்டுள்ள வசனங்களில் மிகச் சரியான வசனத்தின் கீழ் கோடிடுங்கள்.**

07. 1) உடற்பயிற்சி காலையில் மிகப் பொருத்தமானது.
   2) காலையில் உடற்பயிற்சி மிகப் பொருத்தமானது.
   3) மிகப்பொருத்தமானது காலையில் உடற்பயிற்சி.

08. 1) கடல் அலையின் முழுவதும் பிரதேசம் முற்றாகச் சேதமடைந்தது.
   2) பிரதேசம் முழுவதும் கடல் அலையினால் முற்றாகச் சேதமடைந்தது.
   3) முற்றாகச் சேதமடைந்தது பிரதேசம் முழுவதும் கடல் அலையினால்.

**09 தொடக்கம் 11 வரையிலான கேள்விகளுக்குப் பின்வரும் வரிப்படத்தைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| பேனா | - 1 |
| பென்சில் | - 2 |
| விலை ரூபா | 25.00 |

| | |
|---|---|
| பேனா | - 2 |
| பென்சில் | - 3 |
| விலை ரூபா | 44.00 |

09. ஒரு பென்சிலின் விலை எவ்வளவு?
1. 5/=  2. 6/=  3. 7/=

10. ஒரு பேனாவின் விலை எவ்வளவு?
1. 13/=  2. 14/=  3. 15/=

11. ஐந்து போனவினதும், மூன்று பென்சிலினதும் விலை எவ்வளவு?
1. 82/=  2. 83/=  3. 85/=


**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

12. ஒருவர் தான் பயணம் செய்யவேண்டிய தூரத்தின் 1/8 பகுதியை நடந்து சென்றார். அவர் நடந்து சென்ற தூரம் 2 km எனின், அவர் பயணம் செய்ய வேண்டிய மொத்தத் தூரம்?
1. 4 km  2. 8 km  3. 16 km

13. இரவில் எப்பொழுதும் இருப்பது.
1. சந்திரன்  2. நட்சத்திரம்  3. இருள்





14. தாசன் என்பவன் சரியான கஞ்சன். அவனிடம் இருந்து ஏதாவது பொருளைப் பெறுவது மிகக் கடினமாகும்.
1. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதைப் போன்று
2. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு என்பதைப் போன்று
3. ஆமையிடமிருந்து இறக்கை கேட்பதைப் போன்று

15.





1. 54  2. 72  3. 81

16. அருளகம், சருமம், பகலவன் என்னும் சொற்கள் முறையே ATLSM, STWM, PKRVI குறியீடுகளால் காட்டப்படுகின்றன. இதன்படி சகலரும் என்னும் சொல்லை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆங்கில எழுத்துக்கள்.
1. SRKTM  2. SKRTM  3. SKLTM

17. ஒரு நேர்கோட்டில்  எனும் 4 வடிவங்களை ஒழுங்கு வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் 60 ஆவதாகக் காணப்படும் உரு எது?
1.   2.   3. 

18. ஒரு சதுரக் காணியைச் சுற்றிவர 60 தூண்கள் நடப்பட்டிருப்பின், ஒரு பக்கத்திலுள்ள தூண்கள் எத்தனை?
1. 16  2. 18  3. 20

19. உருக்கோலத்திற்கு ஏற்ப குறியினால் காட்டப்படும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.






20. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு.குணசேகரனின் வீட்டில் சென்ற மார்ச் மாதக் கூட்டம் நடைபெற்றது. திரு.குணசேகரனின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?
1. ஜனவரி  2. பெப்ரவரி  3. நவம்பர்

21. நாளைய தினமும் சூரிய வெய்யில் இல்லாவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்புண்டு.
1. தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்துகொண்டிருக்கும்.
2. தொடர்ந்து இருட்டாக இருக்கும்.
3. மக்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள்.


**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்

விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோயில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்



22. இப்பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது?
.................................................................................................

23. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?
.................................................................................................

25. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?
.................................................................................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துச் சொற்கள் தருக.**

26 பெரிய ..................................  19. நகரம் ..................................
27. தூர ..................................  21. பரந்த ..................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

28. அழகு ..................................  23. முகம் ..................................
29. வீதி ..................................  25. வாஞ்சை ..................................
30. கோயில் ..................................  27. பெரிய ..................................

31 கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?
.................................................................................................

32. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.
1)..................................  2)..................................
3)..................................

33. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக.
.................................................................................................

**சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் இடுக.**

34. கேட்பவருக்கு இல்லையென்னாது கொடுப்பவன் உலோபி (...............)
35. ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா பொன்விழா (...............)
36. அரசன் முறைகேடாக ஆளும் ஆட்சி கொடுங்கோல். (...............)
37. ஒரு இனத்தின் பாரம்பரிய உடை தேசிய உடை. (...............)

# புதிய சாதனைகளை நோக்கி கிளிநொச்சிப் பாடசாலை

(பிரமிலன்)

நடந்து முடிந்த க.பொ.த சாதாரண பரீட்சையில் கிளிநொச்சி- கனகாம்பிகைக் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இம்முறை 24 மாணவர்கள் உயர்தரம் படிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் 11 பேர் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்துள்ளனர்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை அடிப்படை வசதிகளோ போதுமான கட்டட வசதிகளோ இன்றி காணப்படுகின்றபோதும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலினாலும் மாணவர்களின் ஆர்வத்தினாலும் இந்த மாணவர்கள் க.பொத.சாதாரண தரத்தில் சித்திபெற்றுள்ளதாக பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் ஏனைய பின்தங்கிய பாடசாலைகளுக்குத் தமது பாடாசலை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகவும், ஏனைய மாணவர்களுக்கு இந்த மாணவர்கள் முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளதாகவும் கூறிய அதிபர் இந்த மாணவர்கள் உயர்தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும் என வாழ்த்தினார்.

பாடசாலையின் சிறந்த பெறுபேறுகள்

வ.உதயசீலன்- 6A, 2C, S, பா.பிரசானா- 3A, B, 2C,2S, ம.கரிஜானி - 2A,4C, 3S, கா.கபி லன் - 2A, B, C,4S, ச.டசிந்தன் - 2A, B, C, 4S, ம.றஜிபன் -A,3B,2C,S, வி.சயந்தன் -A, 2B, C ,2S, ஜந்தினி -A, B, 2C, 4S, ஆ.சர்மிகா-A, B, 3C, S, இ.சோபிகா - A, B, C, 3S, வ.மோகனா - A, 3C, 3S (சி)


# வீதியின் நடுவில் பாரிய குழி; அபாயத்துடன் போக்குவரத்து

(பிரமிலன்)

கிளிநொச்சி-பாரதிபுரத்திற்கும் அம்பாள் குளத்திற்கும் இடையேயான பிரதான வீதியின் நடுவில் குளம்போன்று பாரிய குழி ஒன்று காணப்படுவதால் இவ்வீதியால் பயணம்செய்ய முடியாதுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொதுச்சந்தை மற்றும் விவேகானந்தா வித்தியாலயம் போன்றவற்றிற்கு செல்லும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுவதால் வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மழை காலங்களில் வீதியில் காணப்படும் பாரிய குழியினுள் நீர் தேங்கி நிற்பதால் பலர் விபத்துக்குள்ளான சம்பவங்கள் நடைபெற் றுள்ளதாகவும், இந்த வீதிதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, விரைவில் வீதியை புனரமைத்துத் தருமாறும் இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (சி)



# களைகட்டும் மோர் விற்பனை



(பகீ)

யாழ்ப்பாணத்தில் இப்போது கோடைகாலம் என்பதால் இளநீர், பழரசம் மட்டுமல்ல மோர் விற்பனையும் களைகட்டியுள்ளது.ஒரு லீற்றர் பாலினை 60ரூபாவுக்கு கொள்வனவு செய்து அதிலிருந்து மோர் தயாரித்து 1போத்தல் மோர் 20 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. ஆரம்பத்தில் ஒரு லீற்றர் பால் 30 தொடக்கம் 40 ரூபா வரை விற்கப்பட்டதாகவும், தற்போது மக்கள் மத்தியில் மோருக்கு அதிக வரவேற்பு காணப்படுவதால் பாலின் விலை 60 ரூபாவாக அதிகரித்துள்ளதாக 20 வருடங்களாக யாழ்ப்பாணம் வண்ணை சிவன்கோயில் அருகில் மோர் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு லீற்றர் பாலைக் காய்ச்சி மோர் கடையும் போது தமக்கு-லீற்றர் அளவிலேயே மோர் கிடைப்பதாகவும், பொருளாதார ரீதியாக எந்த விதமான இலாபம் இல்லாத போதும் பரம்பரையாகச் செய்துவரும் தொழில் என்பதால் இதனைத் தொடர்ந்தும் செய்துவருவதாகவும் அந்த வியாபாரி குறிப்பிட்டார்.மிளகாய் வற்றல் விற்பனை செய்யும் வியாபாரிகள் மோர் மிளகாய் தயாரிப்பதற்காக, மோரினை வாங்கிச் செல்வதுடன், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் மோர் குடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.அத்துடன், மோர் கடையும் போது கிடைக்கும் வெண்ணையினை சமையல் மற்றும் ஆலயத் தேவைகளுக்காக இந்த வியாபாரியிடம் பலர் தேடி வந்து வாங்கிச் செல்கின்றமையால் பாலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மோர், தயிர், நெய் போன்றவற்றிற்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுன்றது. (சி)


# சிறப்புற இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வு

(நிரு)

238 வருடங்கள் பழமை வாய்ந்த திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீகாயாரோகண சுவாமி என அழைக்கப்படும் பரவைக்குளம் சிவன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கும் 10.30 மணிக்குமிடைப்பட்ட சுப நேரத்தில் நடைபெற்றது.

இந்த ஆலயத்தின் புனருத்தாரண காலத்தில் எல்லா சிலைகளும் அகற்றி ஓரிடத்தில் வைத்து கிரியைகள் நடைபெற்றாலும் மூலவரான காயாரோகண சுவாமி மூலலிங்கம் மட்டும் அகற்றப்படாமல் அதே இடத்தில் வைத்து 6 கால கிரியைகள் நடைபெற்ன.

1994 இல் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலயத்தின் திருப்பணி வேலைகள் பொதுமக்களின் உதவியுடன் காலந்தோறும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் இந்த ஆலய புனர் நிர்மாணப்பணிகளை திருப்பணியாக நிறைவேற்ற தேவஸ்தான பரிபாலன சபையினரும் சிவனடியார்களும் விரும்பியமைக்கமைய 3 கோடி ரூபா செலவில் பணிகள் நடைபெற்றன.



இக் கும்பாபிஷேக நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு பரவைக்குள சிவனைத் தரிசித்தனர். (சி)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கட்டுமானப் பணிகளுக்கு மேசன், கூலியாட்கள், பெயின்ரர், தச்சுத்தொழிலாளிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773301041, 0214914633 இற்கு தொடர்பு கொள்ளவும்.

தாதியர்கள் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் Dhamma Rashmi Centre (Jaffna) சுழிபுரம் மத்தி, சுழிபுரம் என்ற முகவரிக்கு சுயவிபரக்கோவைகளை அனுப்பிவைக்கவும்.

பிள்ளையார் இன் விடுதியில் பணியாற்ற Room boys, சமையலாளர் தேவை. முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் இல. 31, மானிப்பாய் வீதியில் உள்ள அலுவலகத்திற்கு இன்று நேரில் வரவும்.

வலம்புரி பத்திரிகையில் பிரதேச செய்தியாளர்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளது. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரங்களுடன், பணியாற்ற விரும்பும் பிரதேசத்தைக் குறிப்பிட்டு பிரதம ஆசிரியர், வலம்புரி, இல3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வெள்ளவத்தையில் உள்ள பாமசிக்கு முன் அனுபவமுள்ள ஆண் (25 வயதிற்கு உட்பட்ட) வேலையாள் தேவை. தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0727050924 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ். நகருக்கு அண்மையில் இயங்கும் கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு முகாமைத்துவ உதவியாளர், படவரைஞர் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 6 நாட்களுக்குள் விண்ணப்பங்களை சாருகாயா நிர்மாணம், செட்டியார் வளவு, சுன்னாகம் அல்லது தொலைநகல் 0212220234 இற்கு அனுப்பி வைக்கவும்.

கொழும்பில் உள்ள தொலைபேசி நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 127A> 2nd Cross Street col 11 இற்கு அல்லது 0773834848 இற்கு தொடர்பு கொள்ளவும்.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள மதீனா தேசிய பாடசாலையில் க.பொ.த(உ/த)இற்கு இராசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கு வெற்றிடமுண்டு. இலவச உணவு, தங்குமிட வசதியுண்டு. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கற்பிக்கக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். மேலதிக விபரங்களுக்கு 077 111 7670, 072 946 2703 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

கணினி கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் 077 665 2424 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை ஆலயத்திற்கு ஆலய சிவாச்சாரியார், நாதஸ்வர -தவில் கலைஞர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் www.ammam ea.ling.com இல் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும்.

வீட்டில் தங்கியிருந்து ஒரு வயது குழந்தையைப் பராமரிக்கவும், வீட்டு வேலைகள் செய்யவும் பெண் உதவியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 3405539 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பம் ஒன்று தற்போது திருகோணமலையில் வசித்து வருகின்றது. அவர்களுடன் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 1569349 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கண்டி அசோகா வித்தியாலயத்தில் பொருளியல், வணிகக் கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களுக்கு 3 வருட அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரும் வரலாறு, இந்துசமயம் ஆகிய பாடங்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர் அல்லது சமமானவர் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை The Principal, Asoka Vidyalaya, No.318, D.S Senanayaka Veediya Kandy என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு 081-2234494 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் உள்ள முன்னணி தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு முழு நேர அல்லது பகுதி நேர புகைப்பட ஊடகவியலாளர் தேவை. அனுபவமுள்ள 25 - 40 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 6 நாட்களுக்குள் Human Resources Department, P.O.Box 160, Colombo. என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0776450286 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# மன்மோகன் - சர்தாரி இனிய சந்திப்பு பாகிஸ்தானுக்கு வருமாறு அழைப்பு



(புதுடில்லி)

பயங்கரவாதிகளால் குண்டுவெடிப்பு மூலம் கொல்லப்பட்ட பெனாசீர்பூட்டோவின் கணவரும், பாகிஸ்தான் ஜனாதிபதியுமான சர்தாரி நேற்று புதுடில்லி சென்றார். விமான நிலையத்தில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பவன்குமார் பன்சால் மற்றும் இராணுவ, வெளியுறவு துறை அதிகாரிகள் வரவேற்றனர்.

தொடர்ந்து பிரதமர் மன்மோகன் இல்லத்திற்கு சென்று அவரை தனி அறையில் சந்தித்து பேசினார். பின்னர் நிருபர்களிடம் பேசிய மன்மோகன், இருநாட்டு தொடர்பான பேச்சுக்கள் கருத்தொற்றுமையுடன் இருந்தது என்றார். பாகிஸ்தானுக்கு வருமாறு சர்தாரி அழைத்ததாகவும், தொடர்ந்து அவரது அழைப்பை ஏற்று கொண்டதாகவும் பிரதமர் மன்மோகன்சிங் கூறினார். இந்த சந்திப்பு இனிமையாக இருந்ததாக பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி தெரிவித்தார்.

1993 முதல் இந்தியாவில் நடந்த குண்டுவெடிப்புகள் மற்றும் பல்வேறு சட்ட விரோத செயல்களில் ஈடுபட்ட பல தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தான் பதுங்கியும், சுதந்திரமாகவும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவர்களை ஒப்படைப்பது தொடர்பாக ஜனாதிபதி இருந்த முஷாரப் காலம் முதல், இந்தியா வலியுறுத்தி வருகின்றன. ஆனால் எவ்வித முன்னேற்ற நடவடிக்கையும் இல்லை.

தற்போது ஜனாதிபதி இருக்கும் பெனாசிர் பூட்டோவின் கணவர், சர்தாரி பொறுப்பேற்ற பின்னர் முதன் முதலாக இந்தியா வந்துள்ளார். ஜனாதிபதி சர்தாரி கடந்த 2005ஆம் ஆண்டு இந்தியாவிற்கு தனது மனைவியும், மறைந்த முன்னாள் பிரதமருமான பெனசீர்பூட்டோவுடன் ஆஜ்மீர் தர்ஹாவிற்கு வருகை தந்தார். அதன்பின்னர் 7 ஆண்டுகளுக்குபின்னர் பாகிஸ்தான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றப்பின் முதன்முறையாக சர்தாரி இந்தியா வந்துள்ளார்.

## 500 பேருக்கு பன்றிக்காய்ச்சல்




(பெங்களூர்)

பன்றிக்காய்ச்சல் கடந்த 2009இல் நாடு முழுவதும் பரவியது. அப்போது, அந்த நோய்க்கு கர்நாடகாவில் 50 பேர் இறந்தனர். தற்போது மீண்டும் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. கோலார் மாவட்டம், அக்ரஹாரா கிராமத்தை சேர்ந்த ஆசிரியை காயத்திரி, தங்கவயலை சேர்ந்த சேர்ந்த ஸ்ரீராமச்சாரி ஆகியோர் இந்நோய் தாக்கி இறந்துள்ளனர்.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரி சந்துரு கூறுகையில், பன்றிக் காய்ச்சல் தாக்கி கோலாரில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். வெளிமாநிலம், வெளியூரிலிருந்து பன்றிக்காய்ச்சல் அறிகுறியுடன் வருபவர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. கர்நாடகா முழுவதும் சுமார் 500 பேருக்கு இந்நோய் பாதிப்புள்ளது தெரியவந்துள்ளது. அவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.


## காஷ்மீரில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை குறைக்கப் பேச்சு

(ஜம்மு)

காஷ்மீரில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைக்கும்படி மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடம் வலியுறுத்தப்படும் என்று காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கூறினார்.


மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் நாளை காஷ்மீர் மாநிலத்துக்கு சுற்றுப்பயணம் செல்கிறார். கோடை காலம் வருவதால் காஷ்மீர் மாநிலத்துக்குள் தீவிரவாதிகள் ஊடுருவல் அதிகமாக இருக்கும். இதை தடுப்பது குறித்து துணை இராணுவம், மாநில பொலிஸாரை உஷார்நிலையில் வைப்பது பற்றி உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்த உள்ளார்.

சிதம்பரம் காஷ்மீர் வரும் போது இம்மாநில முதல்வர் உமர் அப்துல்லா அவரை சந்தித்து பேச திட்டமிட்டுள்ளார். இது பற்றி ஜம்முவில் உமர் அப்துல்லா அளித்த பேட்டியில், காஷ்மீர் மாநிலத் தில் அமுலில் உள்ள பாதுகாப்பு படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை இரத்து செய்வது, மாநிலத்தில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தின எண்ணிக்கையை குறைப்பது ஆகியவை குறித்து சிதம்பரத்துடன் பேச உள்ளேன். மேலும், காஷ்மீர் நிலவரம் குறித்து மத்திய பிரதிநிதிகள் குழு அளித்துள்ள அறிக்கையை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக வெளியிடும்படி சிதம்பரத்திடம் வலியுறுத்துவேன் என்றார்.



## யானைக் கூட்டத்தில் "மதில் மேல் பூனை"

பீனிக்ஸ் பிக்சர்ஸ் சார்பில் கண்ணன்ஜி தயாரிக்கும் படம், 'மதில் மேல் பூனை'. விஜய் வசந்த், விபா ஜோடியாக நடிக்கிறார்கள். படத்தை இயக்கும் பரணி ஜெயபால் இது தொடர்பாக கூறியதாவது இது ஆக்ஷன், திரில்லர் படம். விஜய் வசந்த், விபா கதை ஒன்றாகவும் சிறுவர்களின் கதை மற்றொன்றாகவும் இரண்டு கதைகள் செல்லும். இடைவேளையில் இரண்டும் இணையுமாறு திரைகதை அமைத்துள்ளேன். பிற்பகுதி கதை அடர்ந்த காடுகளில் நடக்கிறது. இதற்காக தமிழக, கேரள காடுகளில் சிறப்பு அனுமதி பெற்று படமாக்கியுள்ளோம். அச்சன்கோவிலுக்கு மேலே நான்கு கி.மீ உள்ளே சென்றால் பெரிய பள்ளதாக்கு மாதிரியான இடம் இருக்கிறது. இங்கு செல்ல ஒற்றையடி பாதைதான் உண்டு. நடந்து சென்று ஹீரோ, ஹீரோயின் சம்பந்தப்பட்ட காட்சியை படமாக்கிக்கொண்டிருந்தோம். திடீரென்று பத்து பன்னிரெண்டு யானைகள் கூட்டமாக எங்களை நோக்கி வந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கேமரா, உள்ளிட்ட படப்பிடிப்பு பொருட்களை அப்படியே போட்டுவிட்டு தூரமாக ஓடினோம். ஆனால், எங்களை நோக்கி வந்த யானைகள் அருகில் இருந்த ஆற்றில் தண்ணீர் குடிக்க இறங்கியதும்தான் எங்களுக்கு நிம்மதி வந்தது. பிறகு ஒரு மணிநேரம் கழித்து யானைகள் சென்றபின் படமாக்கினோம். படம் முடிந்துவிட்டது. கணேஷ் ராகவேந்திரா இசையில் பாடல்கள் பிரமாதமாக வந்துள்ளன. ஒரு பாடலை சிம்பு பாடியுள்ளார் என்கிறார்.



## இந்தியாவில் 36 கோடி ஏழைகள்

இந்தியாவில் 36 கோடி மக்கள் இன்னும் ஏழைகளாக உள்ளனர் என்று திட்டக்கமிஷன் தெரிவித்துள்ளது. திட்டக்கமிஷன் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா அளித்த பேட்டியில் கூறியதாவது,

இந்தியாவில் வறுமை நிலை ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. 1993-94 முதல் 2004-2005 வரையிலான காலக்கட்டத்தில் ஏழ்மை நிலை ஆண்டுக்கு 0.74 சதவிகிதம் என்ற அளவில் குறைந்து வருகிறது. அதன் பின்பு இந்த விகிதம் 2 மடங்காகி ஆண்டுக்கு 1.5 என்ற சதவிகிதம் அடிப்படையில் வறுமை குறைந்து வருகிறது. வறுமை முழுமையாக நீக்கிவிட்டோம் அல்லது ஒழித்துவிட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை.


2004இல் 37.2 சதவிகிதமாக இருந்த வறுமை அளவை 2009-2010ஆம் ஆண்டில் 30 சதவிகிதமாக குறைத்து விட்டோம் என்றே நாங்கள் சொல்கிறோம். இந்த விபரம் சுரேஷ் தெண்டுல்கர் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவில் 36 கோடிப் பேர் இன்னும் மிகவும் ஏழைகளாக உள்ளனர். வறுமை கோடு பற்றிய அளவீட்டை, ஊடகங்கள் சில திரித்து வெளியிட்டன.

அதனால்தான் சர்ச்சைகள் கிளம்பின. நமது பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. அனைத்து துறைகளிலும் வளர்ச்சி சார்ந்த யுக்திகளை கையாண்டு வருகிறோம். விவசாயத்தில், கடந்த ஆண்டுகளில் 2 சதவிகித வளர்ச்சியே காணப்பட்டது. கடந்த ஆண்டு 3.5 சதவிகிதமாக இது உயர்ந்துள்ளது. தேசிய கிராம வேலை உறுதியளிப்பு திட்டம் கூலியையும், வேளாண்மை உற்பத்தியையும் அதிகரித்து இருக்கிறது. வறுமைக்கோடு எல்லை நிர்ணயிக்கப்பட்டு இருப்பது, பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகளை குறைப்பதற்காக அல்ல.

அவர்கள் இன்னும் நிறைய பலன்களை பெற முடியும். மக்களின் வாழ்க்கை தரத்தை மதிப்பிட ஒரு அளவு கோல் தேவைப்படுகிறது. அந்த வகையில்தான் வறுமை கோடு வரம்புக்குள் வருபவர்களின் வருமான அளவு நிர்ணயிக்கப்பட்டது என்றார்.

இந்தியச் செய்திகள்

## கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக குரல் கொடுப்போம்



எதிர்வரும் 9ஆம் திகதி மற்றும் 15ஆம் திகதி நடைபெறும கண்டனக் கூட்டங்களில் இலட்சக்கணக்கில் திரண்டு தற்போதைய கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக குரல் கொடுப்போம் என கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, அ.தி.மு.க ஆட்சிப பொறுப்பேற்ற 2011 மே முதல் ஏழை, எளிய தமிழக மக்களை வாட்டி வதைத் திடும் வண்ணம் தொடர்ந்து புதிய வரி விதிப்பு, பால் விலை உயர்வு, பேருந்துக கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு என்று வரலாறு காணாத அளவில் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்சாரமாவது முறையாக வழங்கப்படுகிறதா என்றால அதுவும் இல்லை.

கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்கள் பல மணி நேரம் மின்வெட்டு கொடுமை காரணமாக இருளில் படாத பாடு படுகிறார்கள். தேர்வு நேரத்தில் மாணவர்கள் படிக்க இயலாமல் திணறுகிறார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் இதுபற்றியெல்லாம் கிஞ்சிற்றும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை என்றார்.





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெயக்குமார் விஜி
முகவரி : கலையரசி வீதி
ஈவினை புன்னாலைக்கட்டுவன்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# காஷ்மீர் பனிமலையில் சிக்கிய 150 இராணுவத்தினரைக் காணவில்லை



பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஷ்மீர் பகுதியில் பனிமலையில் சிக்கி பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 150 பேர் காணாமல் போயுள்ளதாக கூறப்படுகின்றது.

சில இராணுவ வீரர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை குறித்து உறுதியாக கூறமுடியாது என பாகிஸ்தான் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவும் பாகிஸ்தானும் உரிமை கோரும் இந்தப் பகுதியில் இரண்டு நாடுகளினதும் ஆயிரக்கணக்கான படையினர் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

1947 ஆம் ஆண்டு முதல் இந்தியாவும் பாகிஸ்தானும் இந்தப் பகுதிக்கு தொடர்ந்தும் உரிமைகோரி வருகின்றன.

# துருக்கி உறவில் பாதிப்பில்லை - ஈரான்

துருக்கியுடனான உறவுகள் பாதிக்கப்படவில்லை என ஈரான் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அணுத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தைக்கான இடமாக சிரியா அல்லது ஈராக்கினை பரிந்துரைசெய்துள்ளமை உண்மையற்ற முன்மொழிவென துருக்கி பிரதமர் கூறியிருந்தார்.



ஈரானின் நெருங்கிய நட்பு நாடாக உள்ள சிரியாவிற்கு எதிரான சர்வதேசச் சந்திப்புக்கள் இஸ்தான்புல்லில் இடம்பெற்றதை தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

டமஸ்கஸ் அல்லது பாக்தாத்தினை பேச்சுவார்த்தைக்கான இடமாக ஈரான் தெரிவுசெய்துள்ளமை நேரவிரயமான ஒன்றென துருக்கிப் பிரதமர் ரையப் ஏர்டோகன் கூறியுள்ளார்.

வல்லரசு நாடுகளுடனான அணுத்திட்டப் பேச்சுவார்த்தை துருக்கியின் ஸ்தான்புல்லில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்ட போதிலும்,பின்னர் ஈரான் வேறு இடங்களை பரிந்துரை செய்திருந்தது.

# ஆக்கபூர்வ செயலுக்கு அணுசக்தியை ஈரான் பயன்படுத்தினால் நல்லது - அமெரிக்கா

(வொஷிங்டன்)

அணு சக்தியை ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு ஈரான் பயன்படுத்தினால், அமெரிக்கா அதனை ஏற்றுக்கொள்ளும் என்று ஈரானிடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

துருக்கிப் பிரதமர் தயீப் எர்டொகன் மூலமாக ஈரான் நாட்டுக்கு இத்தகவலை ஒபாமா கடந்த வாரம் தெரிவித்திருப்பதாக வொஷிங்டன் போஸ்ட் நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் சியோலில் நடைபெற்ற அணு ஆற்றல் பாதுகாப்பு உச்சி மாநாட்டின் போது, துருக்கிப்பிரதமருடன் இது தொடர்பாக ஒபாமா ஆலோசனை நடத்தியுள்ளார்.

மேலும் ஈரானிய மதத் தலைவர் கொமேய்னி அண்மையில், ஈரான் ஒரு போதும் அணு சக்தியை ஆயுத தயாரிப்புக்குப் பயன்படுத்தாது என்றார்.

இதனைப் பின்பற்றி ஈரான் அரசு உறுதியாக இருக்குமேயானால் நிச்சயமாக அமெரிக்கா, ஈரானின் அணுசக்தி செயற்பாட்டை ஆதரிக்கும் என்றும் ஒபாமா கூறியிருக்கிறார்.

பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை ஈரான் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அமைதித் தீர்வுக்கு முன்வருமாறு வலியுறுததுமாறும் துருக்கிப் பிரதமரிடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார்.

துருக்கித் தலைநகர் இஸ்தான்புல்லில் அடுத்த வாரம் அணுசக்தி தொடர்பாக ஈரானுடன், அமெரிக்கா மற்றும் அதன் ஆதரவு நாடுகள் ஆலோசனை நடத்த உள்ள நிலையில் அமெரிக்காவின் இந்தக்கருத்து வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரானின் அணுசக்தி தொடர்பான அமெரிக்காவுடனான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல துருக்கி தயாராக இருப்பதாக அறிவித்திருந்த நிலையில், இப்பேச்சுவார்த்தைகளை சீனாவிலோ அல்லது ஈராக்கிலோ நடத்த வேண்டும் என்று ஈரான் விரும்புவதாக அந்நாட்டு தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக புரட்சி வெடித்தது. ஆனால், போராட்டம் ஓராண்டை கடந்த போதிலும் இன்னமும் அவர் பதவி விலக மறுத்து வருகிறார். ஐ.நா. எச்சரிக்கையை மீறி போராட்டக்காரர்களை இராணுவம் கொன்று குவித்து வருகிறது. ஹமா மாகாணம் லடம்னா நகரில் நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 27 பேர் கொல்லப்பட்டனர். மற்றொரு இடத்தில் நடைபெற்ற மோதலில் 3 பேர் பலியாயினர்.

# இஸ்ரேலை விமர்சித்த ஜேர்மன் கவிஞர்



ஜேர்மனியைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற கவிஞர் குந்தர் கிராஸ், தனது கவிதை மூலம் தற்போது புதிய சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

தாம் இஸ்ரேல் அரசை தனிமைப்படுத்த விரும்புவதாகவும், இஸ்ரேல் என்ற நாட்டை அல்ல என்றும் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் அரசு மேற்கொண்டிருக்கும் அணு ஆயுதத் திட்டம் குறித்து மேற்கு நாடுகள் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றன. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கொள்கைகளால் இஸ்ரேலுக்கு மேலும் மேலும் எதிரிகள் சேர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இஸ்ரேலை எவ்வளவு சிதைக்க வேண்டுமோ அவ்வளவு சிதைத்து விட்டார் நெதன்யாகு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் அரசு குந்தர் கிராஸை விமர்சித்துள்ளது. அதேநேரத்தில் கிராஸின் கருத்துகளை ஈரான் வரவேற்றுள்ளது. 84 வயதாகும் குந்தர் கிராஸ் தி டின் டிரம் எனும் நாவலுக்காக 1999ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணீர் விட்டு அழுத ஜனாதிபதி



புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள வெனிசூலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் மீண்டும் கியூபாவுக்குச் சென்று சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார்.

மூன்றாம் சுற்று ரேடியோ தெரபி சிகிச்சை அவருக்கு அளிக்க வேண்டி உள்ளது. இதனால் அவர் கியூபாவுக்குப் பயணமாகிறார்.

உயிர் வாழும் போராட்டத்தில் வெற்றி பெற மீண்டும் கியூபாவுக்குச் செல்லப் போவதாக தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் சாவேஸ் குறிப்பிட்டுள்ளார்.

கியூபாவுக்குப் பயணமாகும் முன்னர், துணை ஜனாதிபதி எலியாஸ் ஜாவா, வெளிவிவகாரத்துறை அமைச்சர் நிகோலஸ் மதுரோ மற்றும் அமைச்சரவைச் சகாக்களை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

57 வயதாகும் சாவேஸ், இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொள்ள உள்ளார். கியூபாவில் ஐந்து வார காலம் தங்கி அவர் சிகிச்சை மேற்கொள்வார் என்று தெரிகிறது.

இம்முறை சிகிச்சைக்கு நடுவே அவர் தனது நாட்டுக்கு வந்து செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே முதல் இரண்டு சுற்று ரேடியோ தெரபி சிகிச்சை முடிந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை குடும்பத்தினருடன் தேவாலயம் சென்றிருந்த போது ஜனாதிபதி சாவேஸ் கண்ணீர் விட்டு அழுததாக குடும்பத்தினர் தெரிவித்தனர். அப்பா, அம்மா, மனைவி, குழந்தைகள் உடன் இருந்ததால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று பின்னர் சாவேஸ் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# மலாவியின் ஜனாதிபதி ஜாய்ஸ் பாண்டா



மலாவி ஜனாதிபதி பிங்குவா முத்தாரிகா இறந்ததைத் தொடர்ந்து, ஜாய்ஸ் பாண்டா புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்க உள்ளார்.

தென் கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவியின் ஜனாதிபதி பிங்கு வா முத்தாரிகா(வயது 78). இரண்டு நாட்களுக்கு முன்பு இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால், தென் ஆபிரிக்காவுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

அவர் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனாலும் இதுகுறித்து அதிகாரபூர்வமாக மலாவி அரசு எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை. இதனால் குழப்பம் நிலவி வந்தது.

இந்நிலையில் பிங்கு இறந்து விட்டதாக மலாவி அரசு நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து புதிய ஜாய்ஸ் பாண்டா பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

துணை ஜனாதிபதியாக இருந்த இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஜனநாயக மக்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் இவருக்கு ஜனாதிபதி பதவி கிடைக்காது என தகவல் வெளியாகியது. இந்தப்பிரச்சினையை சுமூகமாக தீர்க்கும்படி, மலாவி அரசுக்கு அமெரிக்கா, பிரிட்டன் நாடுகள் அறிவுறுத்தின. இதனையடுத்து ஜாய்ஸ் பாண்டா புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

# தீவிரவாதிகளின் சொத்துக்கள் சீனாவில் முடக்கம்

(பீஜிங்)

பாகிஸ்தானில் தீவிரவாதப் பயிற்சி பெற்ற ஆறு நபர்களின் சொத்துக்களை சீனா அரசு முடக்கி உள்ளது.

சீனாவில் சிங்ஜியாங் மாகாணத்தில் உள்ள கஷ்கார் என்ற இடத்தில் கடந்தாண்டு ஜூலை மாதம் குண்டு வெடித்ததில் ஆறு பேர் பலியாயினர், 15 பேர் படுகாயமடைந்தனர்.

இதற்கு தடை செய்யப்பட்ட 'கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிக் இயக்கம்' பொறுப்பேற்றது. ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லையையொட்டி சீனாவில் அமைந்துள்ள சின்ஜியாங் பகுதியில் உய்குர் பழங்குடிகள் அதிகம் வசிக்கின்றனர்.


இந்தப்பகுதியில் தான் கிழக்கு துர்கிஸ்தான் இஸ்லாமிக் இயக்கத்தினர் அதிகம் உள்ளனர். கடந்தாண்டு நடந்த குண்டு வெடிப்புக்கு காரணமான ஆறு பயங்கரவாதிகளை, சீன அரசு தேடி வருகிறது.

தலைமறைவாக உள்ள இந்த பயங்கரவாதிகளை ஒப்படைக்கும்படி சர்வதேச நாடுகளிடம் சீனா கோரியுள்ளது. இதற்கிடையே இந்த ஆறு பேரின் வங்கிக் கணக்கு மற்றும் சொத்துக்களை சீன அரசு முடக்கியுள்ளது. இந்நிலையில் இந்த ஆறு பேரும் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாமில், குண்டு வெடிப்பு மற்றும் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளதாக சீன வெளிவிவகாரத்துறை அதிகாரி ஹாங் லீ தெரிவித்துள்ளார்.



# நந்தன வருட இராசி பலன்கள்

## கடகம்



புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய (பெயரின் முதல் எழுத்துக்கள்: ஹி, ஹீ, ஹே, ட, டி, டே, டோ உள்ளவர்களுக்கும்)

**வாழ்க்கையில் திருப்பம் தரும் குருப்பெயர்ச்சி!**

யாரை அணுகினால் காரியங்களில் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் கடக ராசி நேயர்களே!

உங்களைப் பொறுத்தவரை, உங்கள் ராசிநாதன் சந்திரனை குரு பார்த்து ஆண்டின் தொடக்க நாள் அமைகிறது. விரயாதிபதி நீசம் பெற, அஷ்டமாதிபதி வக்ரம் பெறத் தொடங்கும் இந்த ஆண்டு உண்மையிலேயே உன்னதமான ஆண்டாகவே அமையப் போகிறது.

என்றாலும், சில மாதங்கள் கழித்து சனி மீண்டும் 4இல் சஞ்சரிக்க போகிறார். அர்த்தாஷ்டம சனியின் ஆதிககம் மீண்டும் தலைதூக்கப் போகின்றது. அந்த நேரத்தில் தேவையில்லாத வீண் குழப்பங்களும், மனச்சஞ்சலங்களும் தேடி வந்து கொண்டே இருகக்கும்.

அந்த நேரத்தில் வரும் இனம்புரியாத கவலைகளை நீக்க இறை வழிபாட்டை முறையாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கேதுவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் குடும்ப பொறுப்பை வாழ்க்கைத்துணையிடம் ஒப்படைக்க முன் வருவீர்கள். தேக நலன் கருதி புதிய மருத்துவ சிகிச்சைகளை நாடுவீர்கள். குருப்பெயர்ச்சிக்கு பின்னால் உங்கள் ராசிக்கு 5 இல் குருவின் பார்வை பதிவதால் அதன் பின்னரே சகல வழிகளிலும் நன்மைகள் அதிகம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**சிறிய விஷயத்தைப் பெரிதாக்கி பார்ப்பீர்கள்!**

எதையும் ஒரு முறைக்கு பல முறை சிந்தித்து செயல்படுபவர்கள் நீங்கள். உங்கள் மனதில் புதுப்புது கருத்துகள் தோன்றி கொண்டே இருக்கும். மனோசக்தி மிக்க நீங்கள் தன்னம்பிக்கையை மட்டும் கூட்டிக்கொண்டால் தரணியில் புகழ் பெற்ற மனிதர்களில் முதலிடம் பிடிப்பீர்கள்.

பெரிய விஷயங்களைப் பற்றி பேசாமல் விட்டு விடுவீர்கள். சிறிய விஷயங்களைப் பெரிதாக்கி பார்த்துப் பேசுவீர்கள். உங்களுக்கு இந்தப் புத்தாண்டு எப்படி இருக்கும்? என்பதைப் பற்றி பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி மூன்று வரை**

ஆண்டின் தொடக்கத்தில் குருச்சந்திர யோகமும், குரு மங்கள யோகமும் இருக்கிறது. ஆயினும், குரு பத்தில் அல்லவா சஞ்சரிக்கிறார், எனவே பொறுப்புகள் மாறுவதும், இருப்புகள் கரைவதும், விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படுவதும் இயல்பான தாகவே அமையும்.

மூன்றில் சனி வக்ரம் பெறுவதால் சகோதரர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். தொழில் வளர்ச்சிக்கு கை கொடுக்க புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியும் வந்து சேரலாம். ஆச்சரியப்படக் கூடிய செய்தியும் வந்து சேரலாம்.

**குருபெயர்ச்சி தரும் பலன்கள்?**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று சொல்லப்படும் குரு உங்கள் ராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். அவர் இதுவரை 10இல் சஞ்சரித்து பதவிகளில் சில மாற்றங்களை கொடுத்திருக்கலாம். இனி பதினோராமிடத்தில் சஞ்சரித்து, நீங்கள் மதிநுட்பத்தால் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் மகத்தான அளவில் வெற்றிகளைப் பெற வைக்கப் போகிறார்.

பதினோராமிடத்தில் சஞ்சரிக்கும் குரு லாப ஸ்தான குரு என்று அழைக்கப்படுகிறார். எனவே, வரவு வந்து கொண்டே இருக்கும். வளர்ச்சிப் பாதைக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணம் வெற்றிகரமாக நிறைவேறும். உதிரி வருமானங்களை உள்ளம் மகிழ கொண்டு வந்து சேர்க்கும் குருவை பெயர்ச்சிக்கு முன்னதாகவே பார்த்து வழிபட்டு வந்தால், பெருமைக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும்.

உங்கள் ராசிக்கு பதினொன்றில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, அந்த இடத்து ஆதிபத்தியங்கள் எல்லாம் அற்புதமாக நடைபெற வைத்து விடும். குறிப்பாக, சகோதர சகாய ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகியவை புனிதமடையப் போகின்றன. இதன் விளைவாக, நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

சகோதர ஒத்துழைப்பு கிடைத்து தக்க விதத்தில் வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ளப் போகிறீர்கள்.

**செவ்வாய், சனி சேர்க்கை காலம்!**

கன்னி ராசியில் செவ்வாயும், சனியும் சேரும் நாட்கள் மட்டும் நீங்கள் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும். அந்த நிகழ்வு ஆனி 9 முதல் ஆடி 29 வரை இருக்கிறது. சகோதர ஸ்தானத்தில் ஒன்று கூடும் இந்த கிரகங்களால், பொருள் இழப்புகளும், விரயங்களும் உருவாகலாம்.

பொல்லாதவர்களின் சிநேகத்தால் இல்லத்தில் குழப்பங்கள் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி ஆபரணங்கள் வாங்கி சேர்க்கும் எண்ணம் மோலோங்கும் எதைச் சொன்னாலும் யோசித்து சொல்வது நல்லது.

**துயரங்களைப் போக்குமா துலாம் ராசி சனி!**

ஆவணி 27 ஆம் திகதி முதல் துலாம் ராசிக்குள் உச்சம் பெறும் சனி உங் களுக்கு நன்மை, தீமைகளை கலந்தே வழங்குவார். சொத்துக்களை வாங் கும் சூழ்நிலையும் உருவாகும். விற் கும் சூழ்நிலையும் உருவாகும்.

சொந்தங்களைப் பகை பாராட்டாமல் நடந்து கொள்வது நல்லது. வாகனங்கள் வைத்து இருப்பவர்கள் கவனமுடன் ஓட்டி செல்வதோடு, வாகன மாற்றமும் செய்ய முன்வர முயற்சிப்பர். தாய் வழித் தொல்லைகளை சந்திக்க நேரிடும்.

**வக்ர குரு வரவைக் கொடுக்குமா, செலவைக் கொடுக்குமா?**

புரட்டாசி 26ஆம் திகதிமுதல் தை 24ஆம் திகதி வரை ரிஷபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். உங்கள் ராசியை பொறுத்தவரை 6, 9இற்கு அதிபதியாக குரு விளங்குவதால், வராத கடன்கள் வசூலாகும். எதிரிகள் விலகுவர். உடல் ஆரோக்கியத்திற்கு ரண சிகிச்சை செய்வது தான் நல்லது என்று சொன்ன மருத்துவர்கள் இனி சாதாரண சிகிச்சையிலேயே நோய் குணமாகி விடும் என்று ஒரு ஆச்சரியப்படத்தக்க செய்தியை தருவர்.

பங்காளி பகைகள் உருவாவதை தவிர்க்க முடியாது. தந்தை வழி விரோதங்களும், விற்ற சொத்துக்களால் பிரச்சினைகளும் உருவாகலாம். சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவதன் மூலம் சிக்கல்களிலிருந்து விடுபட இயலும். அரசியலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

**பாம்பு கிரக பெயர்ச்சி பக்க பலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம் திகதி துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். இந்த கிரக பெயர்ச்சி உங்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை கொடுக்கப் போகிறது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு புதிய கூட்டாளிகளுடன் இணைந்து தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.


நான்காமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் ராகு தாயின் உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தி அகற்றுவார். பயணங்கள் அதிகரிக்கும். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

துலாம் ராகு தொட்ட காரியத்தில் வெற்றியடைய வைக்க முறையான ராகு ப்ரீதிகளை செய்வது நல்லது.

அர்த்தாஷ்டம ராகு என்பதால், சர்ப்ப சாந்தியை யோக பலம் பெற்ற நாளில் செய்தால், செல்வத்தை அது அள்ளி கொடுக்கும். பழைய வாகனங்களை கொடுத்து, புதிய வாகனங்களை வாங்கி மகிழ உகந்த நேரமிது.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31 ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் சனி 7, 8 இற்கு அதிபதியாவார். அஷ்டமாதிபதி வக்ரம் பெற்றால் யோகம் தான் என்றாலும், சப்தமாதிபதியாகவும் அல்லவா சனி சஞ்சரிக்கிறார். எனவே, வந்த வரன்கள் வாயிலோடு திரும்பி விடலாம். எந்த நேரத்திலும் வாழ்க்கைத் துணையோடு மோதல் உருவாகலாம். ஆகவே, அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்லவேண்டிய நேரமிது. சேமிக்கத்தான் முடியாதே தவிர செலவிற்குப் பணம் வந்து கொண்டே இருக்கும்.



சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களில் முதல் சுற்று நடப்பவர்கள் அதற்குரிய கோவிலுக்கும், இரண்டாவது சுற்று அர்த்தாஷ்டம சனி நடப்பவர்கள் அதற்குரிய கோவிலுக்கும், மூன்றாவது சுற்று அர்த்தாஷ்டம சனி நடப்பவர்கள் அதற்குரிய சிறப்பு வழிபாட்டையும் மேற்கொண்டால் தான் தோல்வியில் துவளாமல், வெற்றியில் ஒட்டிக்கொள்ள இயலும்.

திங்கட்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்திற்கு சென்று மங்கலம் தரும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமையன்று விநாயகர் சன்னிதியில் விநாயகர் கவசமும், அனுமன் சன்னிதியில் அனுமன் கவசமும், சனீஸ்வரர் சன்னிதியில் சனீஸ்வரர் கவசமும் பாடி வழிபட்டு வாருங்கள்.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்த நந்தன வருடத்தில் பணப்புழக்கம் சீராக இருக்கும். பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். வேலைப்பளு அதிகரிக்கும். வியாழனின் பெயர்ச்சிக்கு பின்னால், விரும்பிய பொருட்களை விரும்பிய நேரத்தில் வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மாறும். தாய் வீட்டோடு இருந்த போராட்டம் அகன்று, தானாகவே அவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். செவ்வாய், சனி சேர்க்கை காலத்தில் மட்டும் சகோதரர்களை அனுசரித்து செல்வது நல்லது. இந்த ஆண்டு சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் உங்களுக்கு அதிகமாக இருப்பதால் பெண் குழந்தைகளின் குணத்தில் மாறுபாடுகள் தோன்றலாம். குழந்தை வளர்ப்பில் கூடுதல் கவனம் தேவை. சர்ப்ப சாந்தி செய்வதும், நந்தி வழிபாட்டை மேற்கொள்வதும் சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்...)

## மோசடி.....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

மனித உரிமை இராஜதந்திரம் என்பதான ஒன்றை ஆலோசனையளிப்பதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறது" என்று பெய்ஜிங்கால் விநியோகிக் கப்பட்ட ஒரு சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த உண்மைகள் எல்லாம் மனித உரிமைகள் விடயத்தில் இரட்டை வேடம் போடும் அதன் கபடநாடகத்தையும், அத்துடன் மனித உரிமைகள் என்கிற பேரில் தனது மேலாதிக்கத்தைப் பின்தொடர்வதற் கான அதன் துஷ்டநோக்கம் கொண்ட வடிவத்தையும் முழுமையாக அம்பலப்படுத்துகின்றன.

கொள்ளையிடும் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களை முன்நிறுத்த "மனித உரிமைகளை" மொத்தமாய்ப் பயன்படுத்துவதென்பது 1930களில் ஹிட்லர் ஜேர்மன் மக்களுக்கு எதிரான சூறையாடும் நடவடிக்கைகளை நிறுத்தவே தனது நடவடிக்கைகள் என்று கூறியதையும், அல்லது முசோலினி எத்தியோப்பியாவின் ஒரு "மிருகத்தனமான ஆட்சி"க்கு எதிரான ஒரு போரை நிகழ்த்திக் கொண்டி ருப்பதாகக் கூறியதையும் விட வேறெதனை நினைவுக்குக் கொண்டு வர முடியும்.

அன்றிருந்த அதே மட்டத்திற்குத் தான் இன்றைய நிலையும் இருக்கிறது, மனித உரிமைகளை இரட்டை வேடத்துடனும் தெரிவுடனும் கையிலெடுப்பது சிரியாவில், ஈரானில் அல் லது பூமிப்பந்தின் வேறெங்கிலும் உள்ள உழைக்கும் மக்களின் உண்மையான உரிமைகளையும் நலன்களையும் உறுதி செய்வதற்காக அல்ல, மாறாக மில்லியன்கணக்கான மக் களின் வாழ்க்கையையும் நலன்களையும் அச்சுறுத்தும் புதிய போர்களுக்குத் தயாரிக்கும் முகமாகத் தான்.

# ஊரெழுப் பகுதி வீதிகள் அனைத்தும் விரைவில் புனரமைப்புச் செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதியில் உள்ள வீதிகள் நெல்சிப் திட்டத்தின் மூலமாக மிகவிரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்றும் ஏற்கனவே இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் வளர்ச்சித் திட்டங்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

ஊரெழு பொக்கணையில் அமைந்திருக்கும் முத்தமிழ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் இணைந்து உள்ளூர் திட்டங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நெல்சிப் திட்டம் ஊடாக அனைத்து வீதிகளையும் புனரமைக்கவிருக்கிறோம்.

மேலும் சனசமூக நிலையத் தலைவரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முன்பள்ளிக் கட்டடம் புனரமைப்பது தொடர்பாக எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது கவனத்திற்குக் கொண்டு சென்று இக்கட்டடத்தினை புனரமைப்பதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இம்முன்பள்ளியினை சுற்றி வேலி அமைத்துத் தருவதற்கும் இந்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் விருந்தினர்களாக ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் எஸ்.கிரிகரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி ம.திருநாவுக்கரசு, ஊரெழு கிராம படைப்பிரிவு அதிகாரி, ஊரெழு கிராம இந்துக் குருக்கள் மக்கள் சபை உறுப்பினர் கணபதி காசிநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (135)

## கடை உடைத்து...

திகைப்படைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது வைக்கப்பட்டிருந்த பணம் முழுவதும் திருடப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானார்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(137)

# இரண்டாவது வெற்றியை சுவைத்தது புனே வாரியர்ஸ்



(புனே)

ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடனான போட்டியில் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற புனே வாரியஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி அவ்வணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக கங்குலி 20, சாமுவேல்ஸ் 46, உத்தப்பா 40, ஸ்மித் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஹர்மித்சிங் 3 விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 167 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு புனே வாரியர்ஸ் பந்துவீச்சாளர்கள் அச்சுறுத்தலாக விளங்கினர். இதனால் அவ்வணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை மட்டுமே பெற்று இரண்டாவது தோல்வியைத் தழுவியது.

அவ்வணி சார்பாக நாயர், மன்டீப்சிங் தலா 24, பிபுல் சர்மா 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சர்மா 2, டின்டா, சாமுவேல்ஸ், நெஹ்ரா, ரைடர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சாமுவேல்ஸ் தெரிவானார்.

# நெடுந்தீவு வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க தவிசாளர் வேண்டுகோள்

நெடுந்தீவுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளும், ஊர் மக்களும் பிரதேசத்தின் தனித்துவமான வரலாற்றுச் சின்னங்களையும் அதனோடு சேர்ந்த இடங்களையும் பாதுகாப்பாக பேண வேண்டும் என நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது,

நெடுந்தீவு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, பாரம்பரிய நாகரிகங்களுடனும் வரலாறுகளுடனும் தொடர்புபட்ட ஓர் பிரதேசமாகும். இவற்றுக்கெல்லாம் சான்று பகருபவையாக நெடுந்தீவில் இன்றும் பொலிவுடனும் அழகுடனும் விளங்கும் பல வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பல தொல்லியல் திணைக்களத்திற்கு சேர்ந்தவையாகவும் உள்ளன.

இருப்பினும் நெடுந்தீவு பிரதேச சபைக்கு சொந்தமான சில முக்கியமான சுற்றுலா மையங்கள் உள்ளன. இவை அனைத்தும் நெடுந்தீவு மக்களுக்கும், நெடுந்தீவுக்கும் அடையாளமாக விளங்குபவையாகும்.

எனவேதான் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களும், நெடுந்தீவு பிரதேசத்தை தரிசிக்க வருபவர்களும் இப்படியான பிரதேசங்களையும், சின்னங்களையும் பாதுகாத்தல் அவசியமானதாக உள்ளது.

மேலும் நெடுந்தீவு பிரதேசத்தில் அமைந்திருக்கக்கூடிய பெருக்கு மரமானது கி.பி 1888 ஆம ஆண்டு காலப்பகுதியைச் சேர்ந்ததாகும். இது குதிரைக்கு உணவாக ஆங்கிலேயர்களால் வளர்க்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

இது நெடுந்தீவின் மத்தி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் தாமளாப்பு குளக்கரைக்கு அருகில் உள்ள மிகப்பெரிய மரமாகும். இது ஒரு நூற்றாண்டு கடந்த மரமாகும் இம்மரத்தை வரும் சுற்றுலாப்பிராயாணிகளும் சரி நெடுந்தீவில் உள்ளவர்களும் சரி நல்ல முறையில் பேணிப்பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும்.



## நாளாந்த...

ஜெனிவா மாநாடு இடம்பெற்ற காலப்பகுதியில் 19 கடத்தல் சம்பவங்கள் பதிவானமை வருந்தத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## திருமலை, வத்தளையில்...

தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வத்தளை, ஹுனுப்பிட்டிய ஆனந்த மாவத்தையைச் சேர்ந்த வர்த்தகரொருவர் நேற்று நண்பகல் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

வாகன விற்பனையில் ஈடுபடும் 52 வயதான ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஆயுதங்களுடன் வீட்டிற்குள் நுழைந்த சுமார் எட்டுப் பேர் குறித்த நபரை கடத்திச் சென்றதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கிரிபத்கொடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## தேசிய நல்லிணக்கத்தை...

அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு பல நாடுகள் பாராட்டு வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் கல்வி மற்றும் மனித வள மேம்பாட்டில் நாடு பாரியளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முனைப்புக்களில் புலம்பெயர் தமிழ் சமூகம் ஈடுபட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தமிழ் புலம்பெயர் அமைப்புக்களின் பிரச்சாரங்களை கவனத்திற் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

நாட்டை மீளக்கட்டி எழுப்பும் முனைப்புக்களுக்கு உலக சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பிரேரணைக்கு...

இலங்கையும் இறையாண்மை பெற்ற நாடு. எனவே, அயல்நாடு தொடர்பான பிரச்சினையில் ஒவ்வொரு கட்டமாகத்தான் நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அதன்படி, முதல்கட்டமாக கவனமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வெளியிட்டார். தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியா முடிவெடுக்கும் எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

பின்னர் மார்ச் 19 இல் ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டது, அதைப் பிரதமர் வெளிட்டார். மிகுந்த கவனத்தோடு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை இந்தியாவுக்கு மட்டுமல்ல. மனித உரிமை பேரவையிலுள்ள 46 நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட செய்தி. சில நாடுகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையே அது.

ஐ.நா.வில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை 24 நாடுகள் ஆதரித்தன. 15 நாடுகள் எதிர்த்தன. 8 நாடுகள் நடுநிலை வகித்தன. இந்தியா தமது அறிக்கையை கவனமாகத் தயாரித்திருக்காவிடில் ஆதரவு, எதிர்ப்பு நிலை மாறியிருக்கும். எனவேதான் மிகுந்த இராஜதந்திரத்தோடு இந்த விடயம் கையாளப்பட்டது.

மொரீஷியஸ், ரஷ்யா, பாகிஸ்தான், சீனா, சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. இந்த தீர்மானத்தின் மீதான அடுத்த நிலையில், இந்த நாடுகளையும் தமது பக்கம் இழுக்கும் இராஜதந்திரத்தையும் இந்தியா கையாளும் என்றார்.

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (69)

## கிணற்றில்...

மதுபோதையில் இருந்ததாகவும், குடும்பத்தாருடன் சிறு தகராற்றில் ஈடுபட்டதாகவும் தெரிய வருகிறது. வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (50,எஸ்)

## த்னியார் பேருந்தின்...

இரவு 9.30 மணியளவில் அனைத்துப் பயணிகளும் வவுனியா பஸ் தரிப்பில் இறங்கிநின்று யாழ்ப்பாணம் வருவதற்காக காத்திருந்ததாக பயணி ஒருவர் எமது காரியாலயத்திற்கு தொடர்புகொண்டு தெரிவித்தார்.

இதேவேளை சற்று நேரத்திற்குப் பின்னர் குறித்த பஸ் உரிமையாளர் திட்டமிட்டு இன்னொரு பஸ்சில் பயணிகளை ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு செல்வதாக நாடகமாடி நகருக்கு வெளியில் வேறொரு இடத்தில் இறக்கிவிட்டதாக பயணி ஒருவர் தொடர்புகொண்டு தெரிவித்தார்.

## பேச்சிற்கு மூன்றாம்....

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் வெளிப்படுத்திய கருத்து, கூட்டமைப்பின் அதிகாரபூர்வமான கருத்தல்ல. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின் போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுக்காது.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படுவது என்பது அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் நம்பகரமான வகையில் செயற்படவில்லை என்பதால், எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின் போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்பீரிஸ் கூறியிருந்த நிலையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு கூட்டமைப்பு கோரிக்கை விடுக்காது என தற்போது சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜெனிவா மாநாட்டிற்கு செல்வதில்லை என சம்பந்தன், சுமந்திரன் தெரிவித்தமை அவர்களது தனிப்பட்ட கருத்து எனவும் கூட்டமைப்பின் கருத்தாக அதனை ஏற்கமுடியாதெனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்னர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தற்போது அவருக்கு பதில் அளிக்கும் வகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

# இளைஞர்களுக்கு நம்பிக்கை

(கொழும்பு)

தற்போதுள்ள அரசாங்கத்தின் மீது நாட்டிலுள்ள இளைஞர்கள் நம்பிக்கை கொண்டு, சுதந்திரமாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அரசாங்கத்திற்கு வழியமைத்துள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டு காலப்பகுதி இளைஞர்களின் நம்பிக்கை அற்றே ஆரம்பமானதாகவும் அதனால் இளைஞர்கள் பலர் உயிர் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வீடமைப்புத் திட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

# பொலிஸ் நிலையங்களில் இரவில் சோதனையிட முயற்சி

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களை இரவு வேளைகளில் சோதனையிடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர் பொலிஸ் நிலையங்கள் பகல் வேளைகளிலேயே சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இரவு வேளைகளில் பொலிஸ் நிலையங்களை சோதனையிடுவதன் மூலம் அங்கு இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றை உறுதி செய்து கொள்ள முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் முதற்கட்டம் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்படுவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரது ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பொலிஸ் நிலையங்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகளவில் இரவு வேளைகளிலேயே இடம்பெறுவதாக சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து வட, கிழக்கு மக்களுக்கு தெளிவில்லை

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக வடக்கு கிழக்கு மக்களுக்கு போதியளவு தெளிவு கிடையாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாகக் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

எனினும், யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

சாதாரண பொதுமக்கள் முதல் சிவில் செயற்பாட்டாளர்கள் வரையில் பலரிடம் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதில் பெரும்பான்மையானவர்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பற்றியும், அதன் பரிந்துரைகள் பற்றியும் போதியளவு தெளிவின்றி காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

ஆணைக்குழு அறிக்கையில் என்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது பற்றி தமக்கு தெரியாது என அம்பாறையைச் சேர்ந்த பலர் தெரிவித்துள்ளனர்.

தமது பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க எவரும் முன்வருவதில்லை என முஸ்லிம் மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஓரளவு ஆணைக்குழு அறிக்கை பற்றிய தெளிவு காணப்படுகின்றது.

ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக யாழ்ப்பாண மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த மக்களும் ஆணைக்குழு அறிக்கை பற்றி கேள்விப்பட்டதாக தெரிவித்த போதிலும் அதன் உள்ளடக்கம் பற்றி அறியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட வினாவிடைப் போட்டி

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் விசேட வினாடி வினாப் போட்டி நாளைய தினம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 8.30 மணி முதல் நடைபெறும் இப்போட்டியில் தரம் 10, 11, தரம்-12, 13 என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. இதற்கான அரையிறுதிப் போட்டிகள் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றன. இதன் ஏனைய அரையிறுதியும் மூன்றாமிடத்திற்கான போட்டியுமே நாளை நடைபெறவுள்ளன.

தரம்-10, 11 இல் வவுனியா தெ[illegible] கல்வி வலயம், யாழ். கல்வி வலயம், வலிகாமம் கல்வி வலயம், தென்மராட்சிக் கல்வி வலயம் ஆகிய நான்கும் தரம்-12, 13 இல் வவுனியா தெற்கு கல்வி வலயம், யாழ். கல்வி வலயம் வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சிக் கல்வி வலயம் என்பனவும் பங்குபற்றவுள்ளன. இறுதிப் போட்டிகளுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும். (12)

# உத்தியோகப்பற்றற்ற ஆட்கடத்தல் சம்பவங்கள்



(கொழும்பு)

சட்டத்தின் உத்தியோகப் பற்றற்ற பகுதியாக ஆட்கடத்தல் சம்பவங்கள் மாறிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ள ஜே.வி.பி. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 29 ஆட்கடத்தல் சம்பவங்கள் ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தங்களுடன் ஒத்துப்போகாத அரசியல் செயற்பாட்டாளர்கள், தமக்கு ஏற்புடையதல்லாத பாதாள உலகக்குழுவினர், தமக்கு பங்கு வழங்காத குடு விற்பனையாளர்கள் மற்றும் சுதந்திர கொள்கை உடையவர் கள் இவ்வாறு கடத்தப்படுகின் றனர்.

இன்று வெள்ளை வான் கலாசாரம் நாட்டில் சட்டமாக மாறிவிட்டது. அது தொடர்பில் கைது செய்தல் சட்டத்தின் முன் நிறுத்தல் போன்றவை செயற்பாட்டில் இல்லை.

சில வெளிப்படையான விடயங்களை மூடி மறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. கொலன்னாவை சம்பவத்தில் அது தெளிவாகிறது.

அரசாங்கத்தின் இந்த சட்டவிரோத செயல் மற்றும் ஜனநாயக விரோத செயலுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை நிறுத்தி அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்துள்ளது.

குமார் குணரத்னம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்டமையை, அவர்களுடைய மாநாட்டை சீர்குலைக்க எடுக்கப்பட்ட சிறிய நடவடிக்கையாக தாம் கருதவில்லை எனவும் அதனை நாட்டின் பிரஜைக்கு இருக்க வேண்டிய ஜனநாயக உரிமையை கடத்தும் செயலாக தாம் காண்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கலந்துரையாடல்

(வேலணை)

வேலணைப் பிரதேசசபையின் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு இந்தப் பிரதேசசபைக்குட்பட்ட வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, நயினாதீவு ஆகிய உப அ[illegible]வலகப் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு வேலணை பிரதேசசபை தலைமையலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கலந்துரையாடலில் கல்வி, சமூக, பொருளாதார, கலை கலாசாரம் என்பவை தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (05)

# காந்தி சிலை உடைப்பு இந்தியா கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் அமைக்கப்பட்டிருந்த, இந்திய தேசப்பிதாவான மகாத்மா காந்தியின் சிலை உடைக்கப்பட்டமைக்கு இந்தியா தனது கடும் ஆட்சேபத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளதுடன் இச்சிலையை மீளமைப்பதற்கு உதவி வழங்கவும் முன்வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் ஆட்சேபத்தை தெரிவித்ததாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இச்சிலை உடைப்பு குறித்து விசாரணை நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்துமாறு அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மகாத்மா காந்தியின் சிலை உடைக்கப்பட்டமை குறித்து, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா பேசியதாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிலை சேதப்படுத்தப்பட்டமை குறித்து இந்தியா பேசியதுடன் காந்தியின் சிலையை மீளமைக்குமாறும் கோரியது. இலங்கை வெளிவிவகார செயலாளர் கே. அமுனுகமவுடன் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா கலந்துரையாடினார்.

இந்தியாவின் கவலையை அவர் தெரிவித்ததுடன், இச்சம்பவம் குறித்து அவசர விசாரணை நடத்துமாறும் அவர் கோரினார். கிழக்கு மாகாண முதலமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கவனத்துக்கும் இந்திய உயர் ஸ்தானிகர் கொண்டு சென்றார் என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

# கூடங்குளம் அணு உலை குறித்து முறைப்பாடு செய்யத் தீர்மானம்

([illegible])

தமிழகத்திலுள்ள கூடங்குளம் அணு உலைத் திட்டம் தொடர்பில் சர்வதேச அணு முகவர் நிலையத்திடம் முறைப்பாடு செய்ய இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம் இலங்கையின் வட பகுதிக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத் தின் அமர்வுகளில், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம் பிக்க ரணவக்க, தென் இந்திய அணுமின் நிலையங்கள் குறித்து கேள்வி எழுப்ப உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் நடைபெற்ற சர்வதேச அணு சக்தி முகவர் நிலையத்தின் அமர்வுகளில் இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என அமர்வுகளில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்திடுவது பற்றி வெளிவிவகார அமைச்சின் ஊடாக இந்தியாவிற்கு தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சம்பிக்க குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் இந்தியா பதிலளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சூது விளையாடிய வேளை பொலிஸ் அதிகாரி கைது

வவுனியா - மதவாச்சி தனியார் ஹோட்டல் ஒன்றில் சூது விளையாடிக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் உட்பட 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதவாச்சி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று அதிகாலை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்டுபிடிக்க கோரிக்கை

காணாமற் போயுள்ள முற்போக்கு சோசலிச கட்சியின் முன்னணி தலைவர்களான பிரேம் குமார் குணரட்னம் மற்றும் திமுத்து ஆட்டிகல ஆகியோரை உடனடியாக கண்டுபிடிக்குமாறு ஆசிய மனித உரிமை ஆணைக் குழு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து ஆசிய மனித உரிமை ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

காணாமற்போன இருவர் குறித்து அரசாங்கம் இதுவரை அறிவிப்புகள் எதனையும் வெளியிடவில்லை. யாழ்ப்பாணத்தில், மக்கள் போராட்ட அமைப்பை சேர்ந்த இரண்டு பேர் கடத்தப்பட்டு பல நாள் கடந்துள்ள போதிலும் அவர்களுக்கு நேர்ந்த கதி என்ன என்பது பற்றி எவருக்கும் தெரியாத நிலைமை காணப்படுகிறது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1350)

### கணினி திருத்தம்

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.